கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி—சஅ.] நந்தன-ஞூ வைகாசி—ஆனிமீ [பகுதி எ-அ.
Vol. 48. May—July 1952 No. 7-8.

## இசை.

[சங்கீதபூஷணம், திரு. க. முத்துக்குமாரசாமி, அவர்கள், வரகூர்.]

### முன்னுரை.

இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவின் சாரம் எம்மொழியினரும் போற்றும் நிலையில் நம்மொழியில் இயைந்துள்ளது. முத்தமிழின்பெருமை மிகப்பழையநாள்தொட்டே சிறப்புடன் முழங்கி வந்துள்ளது. இசை, நாடகம் என்ற இரண்டிற்கும் இடைக்காலத்தில் சிறிது இடர் ஏற்பட்டது. அச்சமயம் தமிழ்நாட்டின் தவப்பயனால் தோன்றிய சில பெரியோர்களால் அவ்விடர் களையப்பெற்றமையால் அவை மேலும்மேலும் தளிர்விட்டு அழகுபெற்றன. கம்பன் முதலான கவிஞர்களுக்கு அரசியென இருந்த ஒளவையார் இயற்றிய நல்வழி என்ற நூலின் காப்புப்பாடலில் "சங்கத்தமிழ் மூன்றும் தா" என்று கேட்டிருப்பதால் முத்தமிழும் முக்கியமாக வேண்டற்பாலதே என்பது அறியக்கிடக்கிறது.

இடைக்காலத்தில் சமணம்என்ற சமயம் எழுந்தது. யாவரும் துறவுகொள்ளவேண்டுமென்று வற்புறுத்துவதே அதன் முதற் கொள்கை. அதைச்சார்ந்த முரட்டுவாதத்தோர் சிலரும், ஒழுக்கச் சீர்திருத்தம் செய்யப்புகுந்த போலித்தனத்தோர் சிலரும் ஒன்று

சேர்ந்து, இசைக்கலையானது அவசியமில்லாது பொழுதுபோக்கச் செய்து அல்லலைத்தருகிறது என்றும் அறிவைக்கெடுக்கிறது என்றும் பலவாறு தியபிரசாரங்கள்செய்து அக் கலையைப் பெரிதும் அலைத்துத் தொலைக்கமுற்பட்டனர். அரசர்கள் பலர் சமணர்களின் சொல்லை நம்பி முத்தமிழ்க்கண்களில் சுடர்க்கண் என்று சொல்லத் தகும் இசைத்தமிழை ஆதரிக்காமல் அதற்கு அழிவுதேடினர். இரக்கமின்மையும், இழிந்தசெயல்களும், முரட்டுவாதமும் மக்களிடையே தொற்றுநோய்போல் பரவத்தலைப்பட்டன. பாற்குடமும் தேன்குடமும் பாரில் நிறையழிந்து கவிழப்போகும்சமயம், அதைத் தடுத்துநிறுத்தி மக்களுக்குப் பயன்படும்படி செய்யத் தோன்றினர் ஒரு வள்ளல். முத்தமிழ்ச் செல்வத்தையும் சைவப் பயனையும் வளர்ந்தோங்கச்செய்து இரண்டுக்குமுள்ள சம்பந்தத்தை விளக்குவதற்கென்றே அவதரித்தார் ஒரு அடியார். அவரே முத்தமிழ்விரகர் எனப் புகழ்ப்பெயர்கொண்ட சம்பந்தமூர்த்தி நாயனர். சம்பந்தஸ்வாமிகள் வாதுசெய்த சமணர்களை வலிய சைவத்தமிழிசைப்பாடல்களின் மகிமையால் வென்று நன்மையை நிலைபெறச்செய்து இசைத்தமிழைச் செழித்துவளர வைத்தார்.

'மந்திர மாவது நீறு' என்ற மணித்தமிழ்இசைப்பதிகம் மன்னனின் வெப்புநோயை நீக்கியது. 'போகமார்த்த' என்ற புனிதத் தமிழிசைப்பதிக ஏடு வெந்தழலில் வேகாது விளங்கியது. 'வாழ்க அந்தணர்' என்ற வளர்தமிழிசைப்பதிக ஏடு வையையின் நீரோட்டத்தை எதிர்த்தது. சைவத் தமிழிசையேட்டின் மகிமைதான் என்னே!

இவைபோன்ற பயனுள்ள அழகுநிறைந்த ஆற்றல்வாய்ந்த தமிழிசைப் பாடல்களைச் சொற்சோர்வுபடப் பாடுவது பெரும்பிழையாகும். வாக்கிற்சிறந்த அருணகிரியார் எழுத்துப்பிழையோடு கவிகற்பது எத்தகையது என்பதைக் கந்தாலங்காரத்தில் அழகாக விளக்கியிருக்கிறார்.

"அழித்துப் பிறக்கவொட் டாஅயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீர்எரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுக்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே."

ஆடம்பரத்தின்வாயிலாக மக்கள்மனதைக் கவரும் சில பாடகர்கள் சினிமாப்பாட்டு முதலியவற்றைப் பாடும்போதுகூட ழகரம் ளகரமாகிறது. ளகரம் லகரமாகிறது. மனம் என்ற சொல் மணமாகவும் மணம் மனமாகவும் திரிகின்றன. தவலைபோயிற்று என்பது தலைபோயிற்று எனத் திரிவதுபோன்ற விபரீதமாறுதல்களும் நேருகின்றன.

'நீதயவாய்' என்ற முத்துத்தாண்டவர் பாடலின் சரணத்தில்,

காலனை வதைசெய்த காலா—புலிப்
பாலனை யாண்ட கபாலா

என்ற சரணப்பகுதியை. புலி என்பதோடு அடுத்த அடியைச் சேர்த்து......'புலிப்பாலனை யாண்டகபாலா' என்றுபாடவேண்டும். சிலர் 'காலனை வதைசெய்த காலா புலிக்காலனை வதைசெய்தகாலா' என்று திருப்புவதோடு அதிலேயே நிரவலும்செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இசை இனிதாயினும் பொருள் என்ன? ஈசன் புலிக்காலனை வதைசெய்தவனா?

ஒருபெரிய இசைப்புலவர் 'முந்துதமிழ்மாலை' என்ற திருப்புகழின் இரண்டாவது அடியாகிய 'முந்தைவினையே வராமற்போக' என்றஇடத்தில் பொருள் விளங்காததால் முந்தைவினையேவ ராமர் போக என்று ஒலிக்கும்படி பாடினார். மற்றொருவர் விளக்கிச் சொன்னபிறகு திருத்திக்கொண்டார்.

'பாத கமலம்' என்று வருமிடத்தில் பாதக மலம் என்று பிரித்துக் கையாள்பவரும் உண்டு.

பாடலின்பொருளைக் கனவிலும் கருதாதவர்கள் பாடும்போது இவைபோன்ற அநேக இடங்களைக் கையாளத் தெரியாமல் பலரும்

வருந்தத்தக்க முறையில் பாழாக்குகிறார்கள். உண்மைக்கலையின் உயர்வைக் கெடுக்கும்முறையில் இப்படிப்பட்ட குறைகளோடு பாடுவதும், குறையோடு பாடுவோரைப் பாடவைத்து அதுகௌரவம் என எண்ணுவதும் நாட்டுக்குப் பெருந்தீங்கிழைப்பது தான்.

'பண் என்னும் பாடற் கியைபின்றேல்' என்ற குறள்வரியையும் 'இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று' என்ற ஒளவை வாக்கையும் இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தமுள்ளதாகும். பண்என்னும் பாடற்கியைபின்றேல்-இசைப்பாடலைப் பாடும்போது பாடலுக்குப் பொருத்தமில்லையானால் பாடலோடுகூடிய அவ்விசை என்ன பயனுடையதாகும்? இழுக்குடைய பாட்டிற் கிசை நன்று-முறையின்றித் திரிதல், கெடுதல், தோன்றல் முதலிய குறைகளோடு இசைப்பாடல்களைப் பாடுவதைவிட, சுரம் இராகம் முதலியவற்றை இசைப்பது நல்லது.

## இசைத்தமிழ்.

இசையும் தமிழும் சேர்ந்ததே இசைத்தமிழ். வளம்சேர்ந்த சொல்லில் கூடிய இசைத்தமிழின் செல்வத்தால் கன்மனத்தையும் நன்மனமாக்க முடியும். இசையோடுசேர்ந்த இயற்றமிழ்க்கருத்துகள் கேட்போருள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிகின்றன. இசையே நாடக இயக்கத்துக்கும் இனிமைதருகிறது. ஆகையால் இயல் நாடகம் என்ற இரண்டிற்கும் இசை இன்றியமையாததாக விளங்குகிறது. சேரன்செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகளால் இயற்றப்பட்டதும் தமிழ்க்காவியங்களாய்த் தலைசிறந்த நூல்களில் ஒன்றாக விளங்குவதுமான சிலப்பதிகாரத்தில், இசையின் இலக்கணமும் பிறவும் விரிவாகக் காணப்படுவதால் இசைத்தமிழ் மூவேந்தர் காலத்தில் நன்கு செழித்தோங்கிச் சிறப்புடன் வளர்ந்திருந்ததென்று அறிகிறோம்.

இசைஎன்பது இனியஓசை என்ற வாசகத்தின்சுருக்கம் என்று சொல்வது பொருத்தமாகும். இனியஓசை என்பதில் இ என்ற

முதலெழுத்தும் சை என்ற கடைஎழுத்தும் சேர்ந்தால் . இசை என்றசொல் உண்டாகிறது. ஓசையை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். ஒன்று இனியஓசை மற்றது வலியஓசை. இனியஓசை அல்லது இசை, சுருதி இலயம் என்ற தாய்தந்தையருக்குப் பிறந்து சுருதியை நிலையாகவைத்து இலயத்தின் உதவியால் நடந்து செவியில் பட்டதும் இன்பத்தைத் தருகிறது. செல்வத்துட் செல்வமாகிய செவிச்செல்வத்து இன்பத்தைத்தரும் இசை, பொருள் செறிந்த பாடலோடு சேர்ந்துவிட்டால் இதயத்தையும் தொட்டுவிடுகிறது. கட்டைவண்டி ஓடும்போது உண்டாகும் ஒலியைப் போல வெறுப்பைத்தரும் ஓசை வலியஓசையாகும். இனியஓசை என்பதன்சுருக்கம் இசைஎன்பதுபோல, வலியஓசையின்சுருக்கம் வசைஎன்று வைத்துக்கொண்டால் வசை இசைக்கு எதிரியாகிறது. இசை செவிக்கு இன்பம்தருவதுபோல வசை செவிக்குத் துன்பம் தருகிறது. வசைஎன்றசொல் ஏச்சுஎன்ற பொருளிற்கூட இசைக்கு எதிரியாகவே இருக்கிறது.

இசைக்கு ஆற்றல் அதிகமா? வசைக்கு ஆற்றல் அதிகமா? வன்மை வெல்லுமா? மென்மை வெல்லுமா? யாரைக்கேட்கலாம்? ஔவையாரைக் கேட்போம்.

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்-வன்மை மென்மையை வெல்லாது. வேழத்தில் பட்டுருவும்கோல் பஞ்சில் பாயாது-யானையின்மீது பாய்ந்து உருவும் ஈட்டியானது மெல்லிதான பஞ்சில் பாயாது. நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்வேருக்கு நெக்குவிடும்-பெரிய இரும்புப் பாரைக்கு அசையாத வலிய கருங்கற்பாறை மென்மையான பசுமையுடைய மரத்தின்வேரினால் பிளக்கப்பட்டுவிடும்.

“வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.”

மென்மை, அறிவு, சுருதி, இலயம் இவை எல்லாம் சேர்ந்த இசைக்கு வலிமை அதிகம்.

அன்பின் உருவான தாயின் தாலாட்டுப் பாட்டினால் அழும் குழந்தை நித்திரையில் ஆழ்கிறது. வண்டியில் பூட்டியிருக்கும் எருதுகள் ஓட்டுவோனால் இசைக்கப்படும் இசையின் துணையால் வன்மையான பாரத்தையும் மகிழ்வோடு இழுத்துச்செல்கிறது. சுரக்காது பாலை அடக்கிக்கொள்ளும் பசுக்கள் சுவையாகப் பாடுவதைக் கேட்டு அளவுக்குமேல் பால் சுரக்கின்றன. ஆயர் குழலோசைக்கு ஆநிரைகள் கட்டுப்பட்டுநடக்கின்றன. மகுடியின் இசைகேட்டு நாகம் மயங்குகிறது. மதங்கொண்டயானை உதயணனின் யாழிசையால் அடங்கியதென்று வரலாறு கூறுகின்றது. ஆகையால் இவ்வுலகில் இசையால் மயங்காதது, இசையில் இன்பமடையாதது, இசைக்குக் கட்டுப்படாதது எவ்வுயிரும் இல்லையென்பது அறிகிறோம். என்பில்லாத புழுமுதல் எல்லாஉயிர்களுக்கும் இசை இன்பம்தரவல்லது. ஆயினும் மற்றஉயிர்களிடம் இல்லாத அதிசயம் ஒன்று சிறப்பாக மக்களிடம் பொருந்திவிளங்குகிறது. மனிதன் சொல்லின்பத்தைக்கண்டு அதன்உதவியால் நவரசங்களையும்பருகி இன்பமடைகிறான்.

எதுகை மோனை முதலிய இலக்கணவிதிகள் சொற்சுவை தரக்கூடிய பாடல்களுக்கு அழகைத் தருகின்றன. எதுகை மோனை இல்லாத இசைப்பாடல் மூக்குக்கயிறு இல்லாத எருதுக்கு நிகராகும். எதுகை மோனையின்றியும் இலக்கணப்பொருத்தமற்றும் போலிப்பாடல் செய்யப்புகுந்த சிலர் 'இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று' என்றவரியை எடுத்துக்கொண்டு குற்றமுடைய பாடலும் இசையில் சேரும்போது சிறப்புடையதாகிவிடும் என்று பொருள் கூறுவர். அப்பாடலின் மற்ற அடிகளைச் சுட்டிப் பொருள்கேட்கும் போது அவர்கள் வெட்கிப்போவார்கள்.

இசைப்பாடல்களாவன பண்முறையான பாடல்களும், கீர்த்தனங்களும், சந்தப்பாக்களும், வரிப்பாடல்களும், வண்ணம், கண்ணி,

சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலிய செய்யுள்வகையுமாகும். மக்கள்வாழ்வில் இசை முன்தோன்றியதா இசைப்பாடல் முன்தோன்றியதா என ஆராய்ந்தோர் இசைதான் முன்தோன்றியதென்று கூறுகின்றனர். கண்டத்தில் தோன்றும் ஒலியை ஒரு விதமாக இசைத்துக்கொண்டிருந்த மக்கள் கருத்துக்களை வெளியிடுவதற்காகச் சொற்களை அமைத்துக்கொண்டனர். அதன்பிறகு துணையாகக் கருவிகளையும் கண்டுபிடித்தனர்.

கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என நால்வகையாகப் பிரிக்கலாம். கண்டத்தை மிடற்றுக்கருவியெனச் சொல்லி ஐவகையாகவும் பிரிப்பர். துளைக் கருவியில் நாதசுரத்தையும் அயல்நாட்டுக்கருவியான ஆர்மோனியத்தையும் ரீட்வாத்தியமென்பதையும் அடக்கிச் சொல்வர்.

இக்கருவிகளிற் சிலசுருதிக்கு ஆதாரமாகவும் சில இலயத்துக்கு ஆதாரமாகவும் இருப்பவை. தற்கால இசையரங்குகளில் வழங்கும் கருவிகளில் தம்பூரா, குழல், வீணை முதலியன சுருதி வாத்தியங்களாகும். மிருதங்கம், தபேலா, கஞ்சிரா, கடம், முகர்சிங் முதலியன இலய வாத்தியங்களாகும்.

சொற்களை அமைத்துக் கருத்துக்களை விளக்குவதற்கு ஏதுவாக இருப்பதாலேயே மற்றக் கருவிகளைவிட, கண்டம் மேன்மையுடையதாக இருக்கிறது. இசையரங்குகளில் பாடல்களுக்கு உதவியாகக் கருவிகளை இயக்குவதே நல்லமுறை. பாடகர்கள் இசையில் தாளவன்மையைக் காட்டுவதாக நினைத்துச் சொற்கள் விளங்காத முறையில் பாடுவதும் பக்கவாத்தியக்காரர்கள் பாடல்கள் விளங்காத வகையில் வாசிப்பதும் சரியான வழியில்லை.

இசைக்கலையானது எப்படிப்பட்ட வறியநிலையையும் மறக்கும்படிசெய்யும் வன்மையுள்ளது. இசைக்கலையில் ஈடுபாடில்லாத தன்மையனை நம்புதல் கூடாது.

"கன்னலங் கனிந்த பாடற் காயக னல்ல னேனும்
இன்னிசை கேட்டு நெஞ்சம் இளகிடா திருப்பான் வஞ்ச
மன்னவர் துரோக மாதி மாபவம் செய்யத் தக்கான்
அன்னவன் தனேகம் பாமல் அகற்றிட வேண்டும் அன்றே."

இப்பாடல் ஆங்கிலப் பெரும்புலவரான ஷேக்ஸ்பியர் வரைந்த 'வெனிஸ் வணிகன்' என்ற நாடகத்தில் உள்ள சில வரிகளைத் தமிழ்ச்செய்யுளுருவில் முத்தமிழ்ப்புலவரான சூரியநாராயண சாஸ்திரியாரால் பாடப்பட்டது. இன்னிசைகேட்டு நெஞ்சம் இளகாத குணத்தோன் பஞ்சமாபாதகங்களுக்கும் அஞ்சாதநெஞ்சினன் ஆவன். அன்னவன் நட்பை விலக்கிவிட வேண்டும்.

இசைபயில்வோனும் இசையைக்கேட்டு அநுபவிக்கும் தன்மையாளனும் ஒரேதன்மையினராவர்.

நமது தமிழ்நாட்டில் முற்காலத்தில் அநேக இசைநூல்கள் இருந்து அழிந்துவிட்டதாக அறிகிறோம். சிலவே வழக்கிலுள்ளன. அவை இலக்கணம் இலக்கியம் என இருவகையில் அமையும்.

*பெரியபுராணத்தில் "அர்ச்சனை பாட்டேயாகும்" எனவும், திருவாதவூரார்புராணத்தில் "அன்பிலாத பண்பினரொனினும் தன்னைப் பாடினர்க் கிரங்கும்" எனவும், திருஞானசம்பந்தசுவாமிகள் திருமுறையில் "பாடுவார்க் கருளுமெந்தை" எனவும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறையில் "தமிழோ டிசைபாடன் மறந்தறியேன்" எனவும், சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறையில் "பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" எனவும், மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகத்தில் "என்புருகிப் பாடுகின்றிலை" எனவும், தாயுமானசுவாமிகள் பாடலில் "பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே" எனவும், அருணகிரிநாத சுவாமிகள் கந்தரலங்காரத்தில் "முத்தமிழால் வைதாரையும்

* திருவலங்கற்றிரட்டு பாடுமுறையில் பரமனைப் பாவால்துதிக்கவேண்டுமென்பது தடையற்றதீர்வை யென்பதற்கு எடுத்துக்காட்டியிருப்பவை.

அங்கு வாழவைப்போன்" எனவும், குமரகுருதாச சுவாமிகள் பாடலில் "பாட்டினுணைப் பழிச்சவொரு பாக்கியமும் பெற்றதன்றி" எனவும், சண்முக ஸகஸ்ரநாமத்தில் குமரக்கடவுள் திருநாமம் "கீதக்ஞன்" "கத்ய பத்யப் பிரியன்" எனவும் வருதலின், அன்புடையார் யாவரும் பரமனைப் பாவாற் றுதிக்கவேண்டுமென்றல் தடையற்றதீர்வை(முடிவு)எனச் சற்சங்கத்தார் யாவரும் அறிவரன்றே.

தேனினுமினிய தேவார திருவாசகங்கள் நற்பேறு அளிக்கவல்ல நல்ல இசை இலக்கிய நூல்களாக வழங்கிவருகின்றன. வள்ளல் அருணகிரியார் பாடிய சந்தத்திருப்புகழ் எந்தக்காலத்தும் இசையுலகுக்குப் பெரும்பயன் அளிப்பதாகவிளங்குகிறது. திருவருட்பா உள்ளம்உருக்கும் தெள்ளியநடையில் அமைந்துள்ளது. பாம்பன் குமாருருதாச சுவாமிகளால் முருகன்மீது பண்முறையில் பாடப்பட்ட திருவலங்கற்றிரட்டும் பல்சந்தப் பஞ்சாமிர்த வண்ணமும் மிருநலன் தருவதாகத் திகழ்கின்றன. கீர்த்தனைமுறையிலுள்ள பாடல்கள் முத்துத்தாண்டவர்முதல் சுத்தானந்தர்வரை அநேக பெரியோர்களால் பாடப்பட்டு இசையின்முன்னணியில் நிற்கின்றன. அமரகவி பாரதியாரின் அழகிய பாடல்கள் உணர்வுதந்து அனைவரையும் விருப்பச்செய்வன. இன்னும் பல நல்லோரின் பாடல்கள் இனியும் வெளிவரலாம். சொல்லுக் குறுதிதரும் திருக்குறளும் இக்கால இசைவல்லுநர்களால் இசையமைத்துப் பாடப்பட்டு வருகிறது. சொல்லின்பம்தரும் நல்லிசைப்பாடல்கள் மக்களின் செவிக்குணவாகத் திகழ்கின்றன. மக்களன்றி மற்றஉயிர்களுக்குச் சொற்பயன் சுவைக்குந்திறன் இல்லை. ஆனால் மக்களைவிட இசையைச் சுவைப்பதில் மற்றஉயிர்கள் சிறந்துவிளங்குகின்றன என்று ஹாஸ்யமாகக் காரணம் கூறலாம். மக்களைத்தவிர மற்றஉயிர்களெல்லாம் இசையென்றால் உயிரைக்கூட மறந்துவிடும் நிலையில் ஆகிவிடுகின்றன. நெஞ்சில் காவுகொண்டு அஞ்சிக்கிடக்கும் நாகப்பாம்பும் மகுடி வாசிக்கும்போது தன்னைமறந்து இசையைச்

சுவைக்க வெளியேவருவதைக் காண்கிறோம். பயனற்ற காரியங்களில் பணத்தை அள்ளிவீசும் செல்வர்களிற்சிலர் இசையரங்கென்றால் தலையை உள்ளுக் கிழுத்துக் கொள்கிறார்கள். இவ்விதத் தன்மையுள்ள மக்கள் மற்றஉயிர்களைவிட எவ்விதம் சிறந்தவராவார்கள்?

முற்காலத்தில் தியாகசிந்தையோடு போற்றப்பட்ட அருந்தமிழிசை இன்று ஆதரிப்பாரற்று மாற்றுருவம் அடையும் நிலையில் கிடக்கிறது. வானொலிநிலையத்தார் நல்லிசையை ஆய்ந்து ஒலிபரப்ப முயன்றிருப்பது அதிக மகிழ்வைத்தருவதாகும்.

## முடிவுரை.

இசை இசையாக விளங்கவேண்டுமானால், இசையில் மணம் கமழவேண்டுமானால், இசை நல்ல பயன் தாவேண்டுமானால், இசைக் கலை உயர்வடையவேண்டுமானால் செந்தமிழ்நாட்டுச் செல்வர்களும் பெரியோர்களும் மூலைக்குமூலை காதைத்துளைக்கும் அலாபப்பாடல்களின் இசையைக் குறைத்து இலாபப்பாடல்களின் ஒலியை மிகச்செய்யவேண்டும். நல்லிசைபாடுவோரை ஆதரிக்கவேண்டும். ஒழுக்கமற்றோர் கையில் சிக்கி வருந்தி அலைந்து வீழ்நிலையிலிருக்கும் இசைக்கலைக்கு விடுதலைதந்து அதை நன்முறைக்குப் பயன்படுத்தவேண்டும்.

இக்காலத்தில் நல்ல இசைப்பாடல்களை நல்வழிக்குப் பயன்படும் முறையில் பிழையின்றி இனிமையாக இசைசொல் இரண்டுக்கும் சம்பந்தம் இருக்கும் நிலையில் தாமும் பாடுவதோடு பிறரையும் அப்படிப் பாடச்செய்து ஆதரித்து இசையென்னுமிடத்திலெல்லாம் நல்லிசை ஒலி முழங்கும்படி செய்யவேண்டியது மிகமிக இன்றியமையாத கடமையும் சிறந்த தொண்டுமாகும்.

வாழ்க இசைத்தமிழ்.
வாழ்க நற்கவி.
வாழ்க வையகம்.

# *ஒழுக்கம்.

[திரு. R. விரபத்திரன் அவர்கள் M. A. தமிழ்விரிவுரையாளர்,
திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகக்கல்லூரி, திருவனந்தபுரம்.]

## தற்காலத்தில் நிகழும் மாறுதல்கள்:

### 1. அரசியல்.

இருபதாம்நூற்றாண்டின் நடுவாகிய இக்காலப்பகுதி, பொதுவாக உலகசரித்திரத்திலும், சிறப்பாக நமது இந்தியநாட்டின் வரலாற்றிலும் பலஅம்சங்களில் முதன்மைவாய்ந்ததாகும். பல நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்த கருத்துக்களும் கொள்கைகளும் புரட்சிகரமான மாறுதல்களை அடைந்துவருகின்றன. அரசியல், சமூகம், சமயம், இலக்கியம், முதலிய துறைகள் அனைத்திலும் தலைகீழான மாற்றங்கள் தோன்றியுள்ளன. "மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்றகொள்கை பெரும்பாலும் மறைந்து, குடியரசே பலதேசங்களிலும் அமைந்துவருகிறது. வல்லரசும் ஸாம்ராஜ்யமும், எதேச்சாதிகாரமும் தகர்ந்துவிடுகின்றன. ஏழை, அடிமைஎன்னும் நிலைகள்மாறி மக்கள் அனைவரும் சரிநிகர் சமானம் என்ற அடிப்படையில் ஒருபுதிய அரசியலமைப்பை உலகமெங்கும் நிறுவுவதற்கானமுயற்சி எல்லாநாடுகளிலும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

### 2. சமூகம்.

சமூக அமைப்பை நோக்குமிடத்தும் சாதி, குலம், குடிப்பிறப்பு, ஆசாரம், உயர்வு, தாழ்வு, தீண்டாமை முதலிய பழங்கொள்கைகள் நலிவுற்று சமத்வம், சகோதரத்வம், சமபந்திபோஜனம், கலப்புவிவாகம், மறுமணம் முதலிய புதுக்கொள்கைகள் சக்திபெற்றுவருகின்றன.

* இது திருவனந்தபுரம் வானொலிநிலையத்திலிருந்து 2-6-52-ல் ஒலிபரப்பியது. அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

### 3. சமயம்.

சமயத்துறையிலும் கோவில், அர்ச்சகர், வழிபாடு, திருவிழா அனைத்தும் பொருளற்றவை என்றும் அவை பேதைமைக்கும் அனாசாரத்திற்கும், வகுப்புணர்ச்சிக்கும் புகலிடமாகவுள்ளன என்றும் மக்களில் ஒரு பெரியஇனம் கருதிவருகிறது.

### 4. இலக்கியம்.

இலக்கியஉலகில் பழைய இலக்கியங்கள் புதியநோக்கோடு ஆராயப்படுகின்றன. தற்காலக்கொள்கைகளுக்குப் பொருந்தாத இலக்கியங்களையும், புராணஇதிகாசங்களையும் இக்காலப் பேனா வீரர்கள் கடுமையாகத்தாக்கி அழிக்கக் கங்கணங்கட்டியுள்ளனர். அரசரையும் அமைச்சரையும், செல்வவர்க்கர்களையும் கதாநாயகர்களாகக்கொண்டு, கற்பனையும் புனைந்துரையும் கலந்து பண்டிதர்க்காகப் பாடிய காலம் மலையேறிவிட்டது. பாட்டாளிமக்களையும், பரமஏழைகளையும் பாத்திரமாகக்கொண்டு அவரது வாழ்க்கைகளை உள்ளவாறு பண்டிதரேயன்றிப் பாமரரும் கற்கும்வகையில், எளிய முறையில் சித்திரிக்கும் இலக்கியங்களே இக்காலத்தில் விரும்பப்படுகின்றன.

## ஒழுக்கம்குன்றுதலின் காரணங்கள்:

### 1. இளைஞர்களின் உணர்ச்சிப்பெருக்கு.

இத்தகைய புரட்சிஇயக்கங்கள் முன்னின்று நடத்துகிறவர்கள் பெரும்பாலும் உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்களேயாவர். அயல் நாடுகளிலிருந்துவரும் புத்தம்புதிய கொள்கைகள் அவர்உள்ளத்தை மிக விரைவாகவும் அழுத்தமாகவும் பற்றிக்கொள்கின்றன. அக் கொள்கைகள் நமதுநாட்டிற்கு ஏற்குமா என்பதையும், ஏற்பன வாயின் அவற்றை நடைமுறையில் கொண்டுவருதற்குரிய வழிகள் யாவை என்பதையும் ஆர அமரச் சிந்திப்பதற்குமுன்புதானே அவர்கள் செயலில் குதித்துவிடுகிறார்கள். அப்பொழுது காரியசித்திக்கு எந்தவழி எளிதாகத்தோன்றுகிறதோ அதனைமேற்கொள்ள அவர்கள் தயங்குவதில்லை. இதனால் ஒழுக்கத்தின் வரம்புகள் மீறவும் சிதைக்கவும்படுகின்றன.

## 2. சுதந்திரம் பெற்ற புது ஆவேசம்.

தற்காலத்தில் நமதுநாட்டில் ஒழுக்கத்தைப்பற்றிய மதிப்புக் குறைந்திருப்பதற்கு வேறுகாரணங்களும் உண்டு. சுமார் இருநூறு ஆண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தின்கீழ் அல்லலுற்ற மக்கள் இப்பொழுது ஐந்தாண்டுகளாகத்தான் விடுதலைபெற்று சுதந்திரமாய் வாழ்ந்துவருகின்றனர். சுதந்திரம்பெற்ற புது ஆவேசத்தில் அவர்களில் பலரும் கட்டவிழ்த்துவிட்ட இளங்காளைகள்போன்று ஒழுக்க நெறிகளைப் பொருட்படுத்தாமல் மனம்போனபோக்கில் சென்று விடுகின்றனர்.

## 3. பிறநாட்டார் தொடர்பு.

மூன்றாவதாக நாம் இன்று உலகிலுள்ள பலதேசத்தவரோடும் கல்வி, தொழில், வியாபாரம், அரசியல் முதலிய ஏதுக்களால் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்துவருகிறோம். நம் மக்கள் அயல்நாடுகளில் சென்று தங்குகின்றனர்; அயல்நாட்டவர் இங்குவந்து நம்மிடையே வாழ்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவகையான நடை, உடை, பழக்கவழக்கங்கள், ஒழுக்க நெறிகள் இருந்துவருகின்றன. இவ் அந்நியநாட்டாரது தொடர்பால் நம்நாட்டுப் பரம்பரைஒழுக்கங்கள் உறுதிகுலைந்து நெகிழ்ச்சியடைகின்றன.

## ஒழுக்கத்தின் அவசியம்.

மேற்கூறிய காரணங்களால் நம் முன்னோர்கள் நெடுங்காலமாக அரிதின்முயன்று ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைத்த நாகரிக மாளிகை அடியோடு தகர்ந்துவிடும்போல் தோன்றுகிறது. ஒழுக்கம் தளர்ச்சியுறும்போது காட்டுவிலங்குகளினிடையே காணப்படும் "பலவான் ஜயவான்" (Might is right) என்னும் விதியே எங்கும் நிலவும்என்பதில் ஐயமில்லை. மனிதசமூகத்திற்கு இதனினும் இழிந்தநிலை வேறுஎன்ன இருக்கிறது? ஒழுக்கநெறிகளை மக்கள் பேணிப்போற்றுதல் எக்காலத்திற்கும் அவசியமேயாயினும் அரசியல், சமூகத்துறைகளில் ஏற்பட்ட கொந்தளிப்பால் பழையநிலைமைகள்மாறிப் புதியகருத்துக்களும் கொள்கைகளும் உருவாகும் இவ்

வேளையில் ஒழுக்கத்தின் இயல்புகளைச் சிந்திப்பதும் அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கான உறுதியை மேற்கொள்வதும் இன்றியமையாதனவாம்.

### ஒழுக்கமாவது யாது?

ஒழுக்கம் ஒரு சித்தாந்தமோ, மதமோ அல்ல; அதனைச் சிறந்த வாழ்க்கைமுறை அல்லது நன்னடக்கையின் வரம்பு என்று கூறலாம். ஒழுக்கம் சமூகத்தின் அங்கமாகவுள்ள ஒவ்வொரு மனிதனது முயற்சியையும் செயலையும் நெறிப்படுத்தி அவன் சிறந்த முற்போக்கை அடைவதற்குத் துணைசெய்வதோடு அவனது வாழ்க்கையை அழகும் இன்பமும் பயனும் நிறைந்ததாகவும் அமைக்கிறது.

### ஒழுக்கஉணர்வின் உதயம்.

இவ் ஒழுக்கஉணர்வு மாந்தர் உள்ளத்தில் இயற்கையிலே தானாக அரும்புவதில்லை. ஒரு குழந்தையை அது பிறந்தபோதே மக்கள்இனத்திலிருந்து பிரித்துத் தனியாகவளர்த்துவந்தால் அது ஒழுக்கத்தைக் குறித்த சிந்தனை எதுவுமின்றி விலங்குகளைப் போலவே வளர்ந்துவரும். பின்னர் அக்குழந்தையை அதன் பெற்றோர்களிடையே வாழ்ந்துவரச்செய்தால் அது அவர்களது ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுகிறது. அவ்வாறன்றி அதனைத் தூரதேசத்திற் கனுப்பிப் புதியதோர் சூழ்நிலையில் வாழ்ந்துவரச்செய்தால் அது அங்குள்ள மக்களின் ஒழுக்கமுறைகளைச் சிறிதுசிறிதாக உணர்ந்து மேற்கொள்ளுகிறது. இதனால் இனத்தோடு சேர்ந்து வாழும் நிலையில்தான் மனிதனுக்கு ஒழுக்கத்தைப்பற்றிய உணர்வு உதயமாகிறதென்றும் அவ்வுணர்ச்சியும் வாழும்சூழ்நிலைக்குத் தக்கவாறு வேறுபடுகிறதென்றும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

### ஒழுக்கத்துள் அடங்கும் பண்புகள்.

உலக வழக்கிலே ஒருவனை ஒழுக்கமில்லாதவன்என்று சொன்னால் அவன் அயல்மாதர்களிடம் முறைகேடாக நடந்துகொள்வதையே நாம் முக்கியமாக எண்ணுகிறோம். ஆனால் ஒழுக்கம் என்பது இவ் ஒருபண்பினுள்மட்டும் அடங்கியிருக்கவில்லை. நமது

முன்னோர்கள் பொய், களவு, சூது, கள்ளுண்டல், காமம், கொலை என்பனவற்றை மாபாதகங்கள் என்று பழித்துவந்தார்கள். இக் கொடிய செயல்களைப் புரிபவர்கள் வேறு எத்தகைய தகுதிகளைப் பெற்றிருந்தபோதிலும் ஒழுக்கமில்லாதவர்கள் என்று பழிக்கப் பட்டு நன்மக்கள்வெறுப்புக்கும் அரசாங்கத் தண்டனைக்கும் ஆளா கிப் பலதுன்பங்களை அடைவார்கள்.

இனி ஒருவனை ஒழுக்கமுடையவன் என்று சொல்லவேண்டு மானால் ஆன்றோரால் பழிக்கப்படும் இக்குறைகள் அறவே இல்லா மல் இருப்பதோடு மேலும் பலநற்குணங்களும் நிரம்பியவனாதல் வேண்டும். அவை அன்பு, இன்சொல், ஈகை, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், சினங்காத்தல், தீவினையச்சம், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, பண்புடைமை, கற்பு, மானம், முதலியனவாம். மேற் கூறிய நற்பண்புகள் அமையப்பெறாத காரணத்தால் ஒருவன் அர சாங்கத் தண்டனைக்கு ஆளாகப்போவதில்லை. எனவே இவற்றைச் சட்டநியதிகளுக்குப் புறம்பான ஒழுக்கம் (Non-legal-virtues) என்று கூறலாம். இவ்வொழுக்கங்களைப் பெரும்பாலோரும் அத் தனை முக்கியமாகக் கருதுவதில்லை. அவற்றை மீறிநடப்பதைப் பெருங்குற்றமாகவும் எண்ணுவதில்லை. அதனால் சமூகவாழ்வில் நேரிடுகின்ற சீர்கேடுகள் பலவாம். இவ்வுண்மையை உணர்ந்தே நம் முன்னோர்கள் அப் பண்புகளனைத்தையும் நல்லொழுக்கத்தின் அங்கமாக வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். இதிலிருந்து ஒழுக்கம் என்னும்சொல் மிக்க வியாபகமான பொருளையுடையது என்பதை அறிந்துகொள்ளலாம்.

ஒழுக்கம் என்ற சொல்லை ஓர் இலக்கணத்துக்குள் வரையறை செய்வது எளிதல்ல. வாய்மை, இன்சொல் முதலிய பண்புகளுக்கு இலக்கணம்வகுத்த திருவள்ளுவர் ஒழுக்கத்திற்கு இலக்கணம் கூறாதுசெல்கின்றார். திருக்குறளுக்கு உரைஇயற்றிய பரிமேலழகர் "ஒழுக்க முடைமையாவது, தத்தம் வருணத்துக்கும், நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை யுடையராதல்" என்று பொருள்கூறு கின்றார். இக்கருத்து வள்ளுவர்க்கும் உடன்பாடே என்பதை,

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (132)

என்று அவர் கூறுவதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். மேலும்

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (139)
ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. (161)

என்னும் குறள்களில் தீயசொல்வழங்காமை, அழுக்காறுமை ஆகிய பண்புகளையும் ஒழுக்கத்தின் பகுதியாக வள்ளுவர்கூறுவதிலிருந்து ஒழுக்கம் என்னும் சொல்லின் வியாபகத்தை அவரும் உடன்படுகிறார் என்பது தெளிவாகிறது.

## ஒழுக்கமும் இயற்கை உணர்ச்சியும்.

மனிதன், இயல்பிலே தன்னலம், முரண், பகைமை முதலிய பண்புகளை உடையவனாக இருக்கின்றான். அவன்வாழும் உலகமும் வாழ்க்கைக்காகப் போராடும் ஒரு போர்க்களமாகவே காணப்படுகிறது. வாழ்க்கைப்போருக்குத் தகுதியுள்ளவனே அழியாமல் நிலைத்துவாழக்கூடும். "Survival of the fittest" என்பது ஒரு நியதியாகும். ஆகவே மனிதன் வாழ்வில் வெற்றிபெறுவதற்கு மேற்சொன்னபண்புகள் கூர்த்திருத்தல் மிகஇன்றியமையாததாகும். ஆனால் ஒழுக்கமோ அவ்வியற்கைப் பண்புகளுக்கு முரணாக உள்ளது. அது மனிதனது உணர்ச்சிகளுக்கு வரம்புகோலி நெறிப்படுத்தப் பார்க்கிறது. அதனை மனிதன் தன்னலத்திற்கும் தான் செய்யும் வாழ்க்கைப்போருக்கும் ஒரு தடையாக எண்ணுகிறான். ஆகவே அவ்வொழுக்கவிதிகளை மீறுவதற்கே அவன் உள்ளம் முற்படுகிறது.

இது மனிதஇயல்பில் ஓர் அம்சம். அதன் மற்றோர் அம்சத்தையும் நாம் எண்ணுதல் வேண்டும். மனிதன் தன்னலம் முதலிய பண்புகளை உடையவனாயினும் தன்னந்தனியாக வாழ்வது அவனது இயற்கையல்ல. அவன் சமூகமாக வாழ்கின்ற ஒரு ஜீவி. மிகப்பழங்காலமுதலே அவன் இனத்தோடு சேர்ந்து சமூகமாகவே

வாழ்ந்துவந்திருக்கிறான். அவ்வாறு வாழ்வது கொடிய விலங்குகளினின்று தன்னைக் காத்துக்கொள்வதற்கும் வாழ்க்கையில் நேரிடுகின்ற பல இன்னல்களைப் போக்குவதற்கும் இன்றியமையாததாயிற்று. இச் சமூகவாழ்வில் மனிதன் தன்னலம் முதலியவற்றை விட்டுப் பிறர்நலம்பேணல், ஒற்றுமை, முதலிய ஒழுக்கநெறிகளை மேற்கொள்ளவேண்டியவனானன். நாளடைவில் ஒழுக்கவுணர்வும் அவனது பண்புகளுள் ஒன்றாக அமைந்தது.

மனிதனது வரலாற்றின் ஒவ்வொரு நிலையிலும், தன்னலத்திற்கும் சமூகநலத்திற்கும் உரிய போராட்டம் நிகழ்ந்துவருகிறது. தன்னலம் வெல்லும்போது மனிதன் ஒழுக்கத்தின் வரம்பை மீறிவிடுகிறான். சமூகநலன் வெல்லும்போது ஒழுக்கநெறிக்கு உட்பட்டுக் காரியம் செய்கின்றான்.

## ஒழுக்கம் குறள்நெறி.

சமூக முன்னேற்றத்திலும் நாகரிக வளர்ச்சியிலும் ஆர்வமுடைய சான்றோர்கள் ஒழுக்கத்தையே அவற்றை அடைவதற்குரிய நெறியாக வற்புறுத்தி வந்துள்ளார்கள். வள்ளுவர்பெருமான் ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாகப் போற்றவேண்டு மென்கிறார்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (131)

என்பது அவர் அருள்வாக்கு.

திருவள்ளுவர் ஒழுக்கத்தின் பொதுஇயல்புகளை 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத்திலும் அதன் பல்வேறு அம்சங்களை 'அறன்வலியுறுத்தல்' முதலிய பலஅதிகாரங்களிலும்வற்புறுத்தியதோடமையாமல் ஒழுக்கத்திற்குப் பகையான பண்புகளைக் 'கூடா ஒழுக்கம்' என்ற தனிஅதிகாரத்திலும்வைத்து விளக்குகின்றார். ஒழுக்கத்திற்கு மூலமாக அமைந்த அறத்தைக் கூறும்போது "மனத்துக்கண் மாசிலனாதல் அறம்" என்றும் "அறத்தான் வருவதே இன்பம்" என்றும், "செயற்பால தோரும் அறனே" என்றும் கூறினர். அறச்செயல்களுக்குப் புறம்பான தீவினைகளை ஒவ்வொருவரும் நீக்கவேண்டும் என்பவர்,

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (202)

என்றும் எச்சரிக்கை செய்தார். 'வாழ்க்கைத்துணை நலம்' என்ற அதிகாரத்தில் பெண்ணின் நிறையுடைமையாகிய கற்பைக் கூறியவர், 'பிறனில் விழையாமை' என்ற அதிகாரத்தில் அப்பண்பு ஆடவர்க்கும் இன்றியமையாததென்று வற்புறுத்தினார். ஈகையைக் கூறும்போது

'வறியார்க்கொன் றீவதே ஈகை' என இலக்கணம்வகுத்து' பின்னும், 'நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' (222) என ஈதலின் உயர்வையும் இரத்தலின் இழிவையையும் ஒருங்கே கூறினார்.

ஒழுக்கத்தின் எந்த அம்சத்தை வற்புறுத்தினாலும் உலக நன்மையை முன்நிறுத்திக்கொண்டு கூறுவதே வள்ளுவரது இயல்பாகும். உதாரணமாக, வாய்மைக்கு அவர்வகுக்கும் இலக்கணத்தைக் கூறலாம். உள்ளதைஉள்ளவாறு கூறுவதே வாய்மை என்று பொதுவாக நாம் எண்ணுகிறோம். கண்டொன்று சொல்லேல் என்ற ஆத்திசூடிவிதியும் இதனை ஆதரிக்கிறது. ஆனால் வள்ளுவர்க்கோ இக்கருத்து உடன்பாடல்ல. ஒருசொல் உண்மைநிகழ்ச்சியோடு எத்துணை பொருந்தியதாயினும் அதனால் பிறர்க்குத் தீமை விளையுமானால் அதனைப் பொய்யென்றுகொள்வதும், அதுஉண்மை நிகழ்ச்சியோடு ஒவ்வாதாயினும் குற்றமற்ற நன்மையைப் பயக்குமானால் அதனை வாய்மை என்று கொள்வதுமே வள்ளுவனார் கொள்கையாகும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். (291)
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். (292)

என்று உலகநன்மையின் அடிப்படையில் அவர் வாய்மைக்குக் கூறும் இலக்கணம் ஒரு புதுமுறையாகவே அமைந்துள்ளது.

ஒழுக்கத்தின் ஒவ்வொரு நெறியைப்பற்றிக் கூறும்போதும் அதனை மக்கள் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிக்கவேண்டி அதுவே மற்றெல்லாவற்றினும் முதன்மையுடையதாகக் கூறுவது வள்ளுவர் இயல்பு. ஈகையின் உயர்வையும் அவசியத்தையும் வற்புறுத்துவதற்காக

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை. (230)

என்று கூறிய வள்ளுவர் 'இனியவைகூறல்' என்ற அதிகாரத்தில்,

அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். (92)

என்று ஈதலைவிடவும் இன்சொல் சிறப்புடையதென்று பேசுகிறார்.

சாதாரணநிலையில் ஒழுக்கத்தைப் பேணுவதில் பலர்க்கும் கஷ்டம் தோன்றுவதில்லை. ஆனால் பிறன் ஒருவன் காரணமின்றி நமக்கு இடர்விளைக்கும்போது ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதிலேயே அருமைப்பாடு உள்ளது. சினங்காத்தல், பொறையுடைமை, இன்னாசெய்யாமை ஆகிய பண்புகள் அப்பொழுதுதான் சிறந்து விளங்குகின்றன.

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (308)
இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314)

என்னும் குறள்கள் மிக்க மாண்புடையனவாகும்.

திருவள்ளுவர் ஒழுக்கத்தை மிகமுக்கியமாகக் கருதினார் என்பதற்கு வேறோர் சான்றும் திருக்குறளில் காணப்படுகிறது. இறைவனை அடைவதற்கு சிலர் அன்புநெறியை மேற்கொண்டு 'அன்பே கடவுள்' (God is love) என்று கூறுவர். மகாத்மாகாந்தி உண்மை நெறியைப்போற்றி 'உண்மையே கடவுள்' (God is truth) என்றார். திருவள்ளுவரோ ஒழுக்கநெறியை வற்புறுத்தி இறைவனை அடைவதற்கு அதுவே மார்க்கம் என்று கூறுகிறார்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (6)

என்ற குறளில் இறைவனை ஐம்பொறிகளின் அவாவை அடக்கிய ஒழுக்கமூர்த்தி என்றும், அவாது நெறி குற்றத்தின்நீங்கிய ஒழுக்க நெறி என்றும், அந்நெறியில் வழுவாதுநிற்பவர்கள் வீட்டுலகை அடைவார்கள் என்றும் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

## ஒழுக்கத்தை வற்புறுத்தும் முறை:

### 1. தெய்வநம்பிக்கை.

ஒழுக்கத்தை ஆன்றோர்கள் எங்ஙனம் வற்புறுத்தியுள்ளார்கள்? அரசியலார் ஒழுக்கத்தை வற்புறுத்துவதற்கு தண்டனைகளைக் கையாளுகின்றனர். ஆனல் அறநூல்கள்கூறும் முறையோ வேறு னது. அவை இறைவன்நம்பிக்கை அல்லது மதத்தின் அடிப் படையில் ஒழுக்கத்தை வற்புறுத்துகின்றன. எங்கும் நிறைந்து எல்லாம்வல்ல இறைவன் மக்களின் நல்லொழுக்கத்திற்கு வெகுமதி யாக இம்மையில் இன்பத்தையும் மறுமையில் மோட்சத்தையும் அளிக்கின்ருன் என்றும், தீயஒழுக்கத்திற்குத் தண்டனையாக இம்மையில் துன்பத்தையும் மறுமையில் நரகம், பிறப்பு முதலிய வற்றையும் அளிக்கின்ருன் என்றும் கூறுகின்றன. வள்ளுவரும்,

அடக்கம் அமாருள் உய்க்கும் அடங்காமை”
ஆரிருள் உய்த்து விடும். (121)

என்றுகூறி சொர்க்கம், நரகம் என்பனவற்றின் அடிப்படையில் அடக்கத்தை வற்புறுத்துகிருர்.

### 2. மனச்சாட்சி.

இரண்டாவது மனச்சாட்சியின் அடிப்படையில் ஒழுக்கநெறி களை வற்புறுத்துவதாகும். மனச்சாட்சியை நம்மைச் சீர்படுத்துவ தற்காக நம் உள்ளத்திற்குள்ளிருந்து பேசும் தெய்வக்குரலென்று கூறலாம். நாம் ஒரு கருமத்தைச் செய்ய முற்படும்போது மனச் சாட்சி அது செய்யத்தகுவது அல்லது தகாதது என்று தீர்ப் பளித்து நம்மை எச்சரிக்கைசெய்கிறது. வள்ளுவரும்,

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் (293)

என்று கூறுகின்றார். ஒருவன் மனமாரப் பொய்சொல்வானுனல் அவன் மனமே அப் பாபத்திற்குச் சாட்சியாகநின்று அதன்பயனுகிய துன்பத்தை அடைவிக்கும் என்பது இதன் பொருள்.

### 3. பொதுமக்கள் ஆதரவு.

மூன்றுவதாகப் பொதுமக்கள் ஆதரவு என்ற அடிப்படையில் ஒழுக்கத்தை ஆன்றோர்கள் வற்புறுத்தியுள்ளார்கள். பொதுஜன அங்கிகாரம் மிகுந்த சக்தியுடையது. பலரும் தம் சொந்தஉணர்ச்சி வேருகஇருந்தாலும் பொதுஜன அங்கிகாரத்திற்கு மதிப்புவைத்து அதற்கு உட்பட்டே காரியம்செய்வர். திருவள்ளுவர்,

> உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார். (140)

என்றும்,

> மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்தது ஒழித்து விடின். (280)

என்றும், உலகப்பொதுமக்களால் அங்கிகரிக்கப்படும் ஒழுக்கமுறைகளையே மக்கள் மேற்கொள்ளவேண்டுமென்று கூறுகின்றார்.

இப் பொதுஜன அங்கிகாரம் நாட்டுக்குநாடு காலத்துக்குக் காலம் வேறுபடுகிறது. மேனுடுகளிலே மணப்பருவம் எய்திய மங்கை ஆடவரோடு கலந்துபழகி உறவாடுதலை அங்குள்ள பொதுமக்கள் அங்கிகரிக்கின்றனர். ஆனுல் நமதுநாட்டில் பொதுமக்கள் கருத்து அதற்கு எதிராகஉள்ளது. இன்னும் நமதுநாட்டிலே இறந்தகணவனேடு மனைவி உடன்கட்டைஏறுவதை மாதர் ஒழுக்காருகச் சில நூற்றுண்டுகளுக்குமுன் வரையிலும் மக்கள் கருதிவந்தனர். ஆனுல் இன்றே அதை ஒரு பாவச்செயலாக நாம் எண்ணுகிறேம்.

### ஒழுக்கத்தாலுண்டாகும் நன்மைகள்.

ஒழுக்கத்தாலுண்டாகும் நன்மைகள் பலவாம். நல்லொழுக்கத்தால் மக்களின் உள்ளம் தூய்மை அடைந்து, உடலும் வலுப்பெறுகிறது. ஒழுக்கத்தைப் பேணுத ஒருவன் மனிதநிலையி

னின்று இழிந்த விலங்குநிலையை அடைந்தவனாக எண்ணப்படுகிறான். ஒழுக்கவிதிகளைப் பேணுதல் வருங்கால சந்ததிகளின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததாகும். தாய்தந்தையர் சிறந்த ஒழுக்கமுடையவர்களாய் இல்வாழ்க்கையை இனிது நடத்திவந்தால் அவர்களது குழந்தைகள் நன்றாகப் பேணிவளர்க்கப்பட்டுச் சிறந்த முற்போக்கை அடைகிறார்கள். எந்தசமுதாயம் ஒழுக்கவிதிகளுக்கு மதிப்புவைத்து மதத்தின் பெயராலும் சமூகஅங்கீகாரத்தாலும் தண்டனை முதலியவற்றாலும் அவற்றை மக்களிடையே வன்மையாக வற்புறுத்திவந்துள்ளதோ அதுவே இன்றளவும் அழியாமல் நிலைபெற்றுவருகிறது.

## ஒழுக்கக்கேட்டிற்குப் பரிகாரங்கள்.

ஒழுக்கக்கேட்டிற்குச் சில சமயநூல்கள் பரிகாரங்கள் கூறுகின்றன. அவை, தவறிழைத்தவர்கள் அச்செயல்குறித்து மனமார வருந்துவதும், அதனைச் சமயத்தலைவரிடம் அறிவித்துவிடுவதும் ஆம். ஆனால் இப் பரிகாரமுறைகள் பகுத்தறிவுக்கும் பரிணாம விதிக்கும் (law of evolution) பொருந்தாதவையாம். ஒரு தீயசெயல் அதனைச்செய்தவனுக்கும் செய்யப்பட்டவர்களுக்கும் தீய பயனை விளைத்தேவிடுகிறது. இதுவே காரணகாரியவிதி (cause and effect) எனப்படுவது. இது மாற்றமுடியாத ஒரு நியதியாகும். ஒருகால் இதனை மாற்றமுடிந்தாலும் அது பல நற்கருமங்களைச் செய்வதன்மூலமாகத்தான் ஆகவேண்டும்.

## ஒழுக்கத்தின் உயர்ந்த நிலை.

ஒழுக்கவாழ்வின் உயர்ந்தநிலை யாதெனின் நல்லொழுக்கத்தை உவப்பதும் தீயொழுக்கத்தை வெறுப்பதும் ஆகிய பண்புகளை மக்கள் தம் இயற்கைஉணர்வால் அடையப்பெறுவதேயாம். தலைமுறைதலைமுறையாக சமூகக்கட்டுப்பாடுகளுக்கு மதிப்புவைத்து ஒழுகுவதாலும் குழந்தைப்பருவமுதற்கொண்டே பல்லாண்டுகள் ஒழுக்கநெறிகளில் பயிற்சிபெறுவதாலும் அந் நிலையை நாம் அடைதல் கூடும்.

# மலாய்நாட்டில் தமிழியக்கம்.

இந்தியமக்கள் பழங்காலமுதலே கடல்கடந்து அயல்நாடு சென்று நம்தேயத்திற்கே சிறப்பாகவுரிய கல்வியறிவொழுக்கங்களைப் பரவச்செய்துள்ளனர். அவர்கள் அங்கே திருக்கோயில்களும் அறச்சாலைகளும் கல்விச்சாலைகளும் நிருமித்திருக்கிறார்கள். சமயப்பணியும் தாய்மொழித் தொண்டும் ஆற்றுவதில் அவர்களுக்கு உலையாத ஊக்கம் உண்டு.

அவர்களிற்பெரும்பாலும் இத்தென்னிந்தியமக்கள் குடியேறிய இடங்களில் தாய்நாட்டன்பும் தமிழ்மொழிப்பற்றும் மிகுதியாகச் செழித்தோங்கிவளரக் காண்கிறோம். மலாய்நாட்டில் கோலாலம்பூர் என்பது அத்தகைய இடங்களில் மிக முதன்மைவாய்ந்தது என்னலாம். மகாமாரியம்மன் கோவிலும், விநாயகர்கோவிலும் அவ்வூரில் இருவேறிடங்களிற் கட்டப்பட்டுள்ளன. பத்துமலையென்னுமிடத்தில் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகோவில் மிக்க புகழமைந்து விளங்குகின்றது.

இவ்வாலயங்களிலெல்லாம் எண்ணிறந்த பக்தகோடிகள் வழிபாடுபுரிந்து வருகிறார்கள். தைப்பூச உற்சவம் மிகச்சிறப்பாக நடைபெறுவதுண்டு. அன்று மக்கள் ஒன்றுகூடி நீராடும் தோற்றம் மனத்தைக் கவரவல்லது. பத்துமலைப்படிவாயிலாக அடியார்கள் சுவாமிதரிசனத்துக்குச் செல்லும் தோற்றம் கரைகாணாத காட்சியின்பமளிக்கும்.

கோலாலம்பூரிலுள்ள கல்விநிலையங்களில் முக்கியமானவை மகாத்மாகாந்தி உயர்தரப்பாடசாலை, மாலைவர்த்தகப்பள்ளிக்கூடம், அப்பர்தமிழ்ப்பாடசாலை என்பனவாம். இக் கலாநிலையங்களில் நிகழும் கல்விமுறையும் ஒழுக்குநிலையும் மிகமிகப் போற்றுந்தாத்தன. விசேடமாக, அப்பர் தமிழ்ப்பள்ளியிற் பயிலும் ஆண்பெண் இருபாலாருமாகிய எண்ணரிய இளமாணவர்கள் தமிழ்க்கல்விகலந்தப்பது யாவர்க்கும் இறும்பூதுபயக்கும் செய்தியாகும். தாய்மொழியாகிய தண்தமிழ்மொழியினிடத்து அவர்கள் கொண்டுள்ள பேரார்வம் அளவினடங்குவதன்று. சுருங்கச்சொல்லுமிடத்து, நம் தாய்நாட்டுமக்களைக் காட்டிலும் சேய்நாட்டுமக்கள் சிறந்த தமிழபிமானம் படைத்தவர்கள் என்றல் மிகையாகாது.

இந் நற்காரியங்களிலெல்லாம் ஈடுபட்டுக் கோலாலம்பூரில் இவற்றை மிகத்திறம்பட நடத்திவரும் செயலாளர் திரு. S. முருகேசு அவர்களை இத்தமிழ்நாட்டிற்கு அறிமுகஞ்செய்விப்பதில் மிகுந்த மகிழ்ச்சியுண்டாகின்றது. அவர் சீலமும் அறிவும் செய்வினைத்திட்பமும் உடையவர்; செல்வாக்குமிகுந்தவர்; தந்நலம் பேணாத் தகுதியும் வாய்ந்தவர். அவர் அவ்வூரிலுள்ள தமிழ்க்கலா மன்றத்தின் தலைவராவர். அக் கலாமன்றம் மிகப்பரந்த பொது நோக்குடையது. அதற்குப் பல உறுப்பினர்கள் உள்ளனர். இயல் இசை நாடகங்களும், சித்திர சிற்பங்களும் ஆகிய தலைசிறந்த தமிழ்க் கலைகளையும் தமிழர்பண்பாடுகளையும் அந் நாடெங்கும் பரப்புவதே அவர்கள் நன்னோக்கமென்று தெரிகிறது.

அம்மன்றத்தின் தலைவராயும், ஸ்ரீமகாமாரியம்மன் கோவில் நிர்வாகசபைத்தலைவராயும் விளங்குகிற திரு. S. முருகேசு அவர்கள் தமிழ்க்கலைவளர்ச்சிக்குரிய சாதனங்களைப் பலவிடங்களிலும் சென்றுதேடி ஆராய்ந்துகொள்ளும் முறையில் சின்னாள் முன்னர் நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு வந்திருந்தார்கள். அப்போது அவர்களுடைய அளவிறந்த தமிழபிமானம் வெளியாயிற்று. கோலாலம்பூரில் அவர்கள் செயலாற்றிவரும் நற்பணிகளைச் செவ்விய சித்திரப்படங்களுடன் தெரிவிக்கும் 'ஹிந்துதீபம்' என்னும் தைப்பூசவெளியீடும் 'பாரதிமணிமலர்' என்ற புத்தகமும் இச்சங்கத்திற்கு அவர்கள் கையுறையாக அளிக்கப்பட்டன.

தங்கள் தேசத்துத் தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு உயர்தரத் தமிழ்க்கல்வியூட்டும் வழிகளை அவர்கள் இங்கு விசாரித்துத் தெரிந்துகொண்டார்கள். அத்துறையில் சிறந்த சேவை புரிந்துவரும் இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உறுதுணை ஒத்துழைப்பைத் தாம் பெரிதும் நாடியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களுடைய இந் நன்முயற்சி இடையூறின்றி இனிது நிறைவேற எல்லாம்வல்ல இறைவன் திருவருள்பாலிப்பதோடு, இத் தமிழ்ச்சங்கமும் தன்னாலியன்ற உதவி எல்லாம் செய்யுமென்பதில் என்ன தடை?

# உள்ளுறையுவமமும் இறைச்சியும்

[வித்துவான் சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A.
விரிவுரையாளர், தமிழ்க்கல்லூரி மயிலம்]

மக்கள் தத்தம்கருத்தை ஒருவர்க்கொருவர் அறிவித்துக் கொள்ளக் கருவியாயுள்ளது மொழி. அம்மொழி வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருளையுணர்த்தும். அத்தகைய மொழிகளின் வகையை "ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி" என்று தொடக்கும் நன்னூற்சூத்திரம் நன்கு விளக்கும். /குறிப்பாகப் பொருளுணர்த்தும் மொழிகளை 'எச்சம்' எனச் சுட்டுவதுமுண்டு. இக்குறிப்புமொழிகள், "சொல்லொடு முடிவுகொளியற்கை புல்லிய கிளவி" "குறிப்பொடு முடிவுகொளியற்கை புல்லிய கிளவி" என இருவகைப்படும். இவைகளே உள்ளுறையெனக் குறிக்கப்படுவன. / ஆதலின் உள்ளுறை என்பது வெளிப்படையின்றிக் கூற்றினுள்ளே குறிப்பாயுறைவது,—சொற்களின் செம்பொருளன்றிக் கூற்றினகத் தடங்கிநின்று உய்த்துணரத் தோன்றும் மறைபொருள்—எனப் பொருள்படும்.

"உடனுறை யுவமம் சுட்டு நகை சிறப்பெனக்
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே"

என்றார் தொல்காப்பியனார். இவற்றுள் "உடனுறையாவது நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடனுறையுங் கருப்பொருளால் பிறிதொன்று பயப்ப மறைத்துக்கூறும் இறைச்சியாம். உவமமாவது அக் கருவாற்கொள்ளும் உள்ளுறையுவமும் ஏனையுவமமுமாம். சுட்டாவது உடனுறையும் உவமமுமன்றி, நகையும் சிறப்பும் பற்றாது வாளாது ஒன்று கூறுதலும் அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டிவருவனவுமாம். நகையாவது நகையாடி ஒன்று நினைந்து ஒன்று கூறுதலாம். சிறப்பாவது ஏனையுவமம் நின்று உள்ளுறையுவமத்தைத் தத்தம் கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நிற்றலாம்" என்பர் நச்சினார்க்கினியர். இளம்பூரணர், "உடனுறையாவது உடனுறைவதொன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு

பொருள் விளங்குவது. உவமம் என்பது உவமையைச்சொல்ல உவமிக்கப்படும்பொருள் தோன்றுவது. சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டப் பிறிதோர் பொருள் படுதல். நகை என்பது நகையினற் பிறிதொருபொருளுணர நிற்றல். சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இது எனக் கூறுவதனனே பிறிதோர்பொருள் கொள்ளக் கிடப்பது" என்பர்.

இவ் வைந்தனுள் ஒன்ருகிய சுட்டு, நச்சினர்க்கினியர் கருத்தின்படி தண்டியாசிரியர் கூறும் ஒட்டணியாம்; இளம்பூரணர் கொள்கையின்படி நுட்பவணியாம். சுட்டினை விபாவனையின்பாற் படுப்பவரும் உண்டு. நகை என்பது இளம்பூரணர் கருத்தின்படி நகுதலாற்ருேன்றும் குறிப்புப்பொருளாம். நச்சினர்க்கினியர் கருத்தின்படி நகையாடிக்கூறும் கூற்றில் தோன்றும் குறிப்புப்பொருளாம். சிறப்பு என்பது நச்சினர்க்கினியர் கருத்தின்படி உள்ளுறையுவமத்திற்கு ஏனையுவமத்தாற் ருேன்றும் சிறப்பாம். இளம்பூரணர் கருத்தின்படி தலைவன் தலைவியைப்பாராட்டுதல் அணிதிருத்தல் முதலிசெயல்களாலே (சிறப்பினலே) பிரிவுக்குறிப்புணர்த்தலும், இதற்குச் சிறந்தது இது எனக்கூறியதனனே தோன்றும் குறிப்புமாம். ஈண்டு உவமம் என்பது உள்ளுறையுவமமே என இளம்பூரணரும், உள்ளுறையுவமும் ஏனையுவமுமென நச்சினர்க்கினியரும் கூறுவர். இச்சூத்திரத்தடியில் இளம்பூரணர் "உள்ளுறையாவது பிறிதொருபொருள் புலப்படுமாறு நிற்பதொன்று; அது கருப்பொருள்பற்றி வரும் என்பது அகத்திணையியலுட் கூறப்பட்டது:" எனக் குறித்திருக்கிருர். இனி உள்ளுறையுவமை யிலக்கணத்தை நோக்குவாம்.

உள்ளுறையுவமம், ஏனையுவமம் போலாகாது யாண்டும் காதலொழுக்கத்தை உணர்த்தல் தவிராது வரும். தெய்வம் ஒழிந்த பிற கருப்பொருள்களுள் சிலவோ பலவோ களனுக்கொண்டு கூறப்படும். கருப்பொருட் செய்தியே ஒப்பாகிக் கூறக்கருதியபொருள் அவ்வொப்பின் உள்ளுறையாய்ப் புலனன்குணர்வோர்க்கு உய்த்துணரத்தோன்றும். (கூருக்குறிப்பாய்க் கருப்பொருளில் மறைந்து தோன்றும்.)

இதனை,

"உள்ளுறை யுவமம் ஏனை யுவமமெனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே" (அகத். 45)

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளும் என்ப குறிப்பறிந் தோரே" (அக. 46)

"உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதே உள்ளுறை யுவமம்" (அக. 47)

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களால் உணரலாம்.

இற்றைக்குச்சற் றேறக்குறைய நானூறாண்டுகட்கு முற்பட்டவரான திருக்குருகைப்பெருமாள் கவிராயர், தாமியற்றிய மாறனலங்காரத்துள்,

"உணர்வதற் கரிதா முவமப் போலி
புணர் திறம் வினையே பொருண்மெய் யுருவெனப்
பிறப்பொடு மைந்தாம் பெற்றித் தாகிச்
சிறப்புறு திணைகளிற் றெய்வத மொழிந்த
கருப்பொருள் களனுக் கட்டுரை பயின்று
முவமையோ டிருள் ளுறுத்தலுற் றயலாய்
உவமச் சொற்றொக லொருதலை யாகியும்
அன்பின தளவா மகத்திணை யிருவயி
னின்ப துன்பத் திசைதிரிந் திசையாத்
துணைவன் றுணைவி தோழி செவிலி
இணையெனும் பாங்கன் பாணனென் றிவராற்
கொள்கையின் வருஉங் குறிப்புரைத் தாகும்"

என உள்ளுறையுவம இலக்கணத்தைச் சூத்திரித்திருக்கிறார். 'இவர் இவ்வாறு இலக்கணம் கூறுதற்குத் துணையாயிருந்தவை அகத்திணையியல் உவமவியல் சூத்திரங்களும் அவற்றிற்குரிய நச்சினார்க்கினியர் பேராசிரியர்தம் உரைகளுமாம்' என்பது இச்சூத்திரத்தாலும் இதற்குக் காரி இரத்தினகவிராயர் கூறிய உரையாலும் பெறப்படும். எனவே இம் மாறனலங்காரச் சூத்திரத்தாலும், உள்ளுறையுவமத்திற்குத் தொல்காப்பியத்துள் நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் காட்டும் உதாரணங்களாலும், உள்ளுறையுவமம்

ஒட்டணியாகாதென்பது தெற்றெனவிளங்கும். எனைனில் "ஒட்டு கருப்பொருளில் பிறக்கவேண்டும் என்னும் யாப்புறவின்றிப் புறத் தினும் புறப்புறத்தினும் சென்று செய்யுட்செய்யும் புலவன் முத லாயினோர் கூறும் கூற்றாய்ச் சுட்டு என்னும் உள்ளுறையவாய் நடத் தல் வேற்றுமை என்றுணர்க." என்பர் மாறனலங்கார உரையா சிரியர். 'இளம்பூரணர் உள்ளுறை யுவமத்திற் குதாரணமாகத் தொல்காப்பித்துள் காட்டிய "வெறிகொ ளினச்சுரும்பு" என்று தொடங்கும் வெண்பா, தண்டியலங்காரத்துள் அடையும் பொரு ளும் அயல்படமொழியும் ஒட்டுக்கு உதாரணமாய்க் காட்டப் பெற் றுள்ளதன்றோ?' எனின், "உடனுறை யுவ்மம் சுட்டுநகை சிறப் பெனக், கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என உள்ளுறையை ஐந்தாய்ப் பிரித்தமையான் உள்ளுறையுவமம் ஒட்டு, இறைச்சி என மூன்றாக்கினர். இங்ஙனமாராய்ந்து பிரித்த இவர்நோக்கமும் தெள்ளிதி னாராய்ந்து கொள்க" என மாறனலங்கார உரையாசிரியர் கூறியதை ஓர்ந்துணர்க. உள்ளுறையுவமம் தலைவன், தலைவி, செவிலி, தோழி, பாங்கன், பாணன் இவர்கள் கூற்றாக, நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகிவரும் கருப்பொருள்களினிட மாகத் தோன்றும். "கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு நாவாயு மோடா நிலத்து" என்பதுபோல் வரும் ஒட்டணி, செய் யுள் குறிக்கும் திணைக்குரிய கருப்பொருள் களாகத் தோன்ற வேண்டுமென்னும் நியதியில்லை. நச்சினார்க்கினியர் "உள்ளுறை யுவம மேனையுவமம்" என்னும் அகத்திணையியற் சூத்திரத்துரை யில் இறுதியில் இது புறத்திற்கும்பொது எனக் கூறியுள்ளார். எனி னும் புறப்பொருளில் உள்ளுறையுவமம் அமைந்துள்ளதற்கு அவர் உதாரணங்காட்டாது அகப்பொருட் செய்யுட்களையே உதாரண மாகக் காட்டியிருத்தலின், உள்ளுறையுவமம் அகத்திற்கே சிறப் புடையது என்பது பெறப்படும். அச்சூத்திரத்திற்கு நச்சினார்க் கினியருரை பொருந்துமோ? என்பது ஆராயத்தகுந்தது.

இனி இறைச்சியை நோக்குவாம். ஒருகூற்றின் சொற்பொரு ளின் வேறாய், அதன்புறத்தே குறிப்பிற்றோன்றும் பிறிதொரு பொருளே இறைச்சி எனப்படும். இதனையே "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்னும் தொல்காப்பியச் சூத்திரம்

உணர்த்தும். "இறைச்சிதானே உரிப்புறத்ததுவே" என இளம்பூரணர் கொண்ட பாடம் பொருத்தமுடையதன்று என்பது பல்லோர் துணிபு. ஆதலின் "பொருட்புறத்ததுவே" என்னும் பாடமே மேற்கூறிய பொருளைத் தருவதாம். இச்சூத்திரத்துக்கு உரை கூறும் நச்சினார்க்கினியர் "இறைச்சியாவது உள்ளபொருளொன்றனுள்ளே கொள்வதோர் பொருளாகலானும், செவ்வன் கூறப்படாமையானும், தலைவன் கொடுமை கூறும்வழிப் பெரும்பான்மை பிறத்தலானும் வழுவாயிற்று;" என்பதால் இதுவிளங்கும். "கருப்பொருட் பிறக்கு மிறைச்சிப் பொருளே" என்னும் அகப்பொருள் விளக்கச் சூத்திரமும் "கருப்பொருள்களனைக் கட்டுரைபயின்ற, பொருட்புறத்தனவா மிறைச்சிப் பொருளணி" என்னும் மாறனலங்காரச் சூத்திரமும் இக்கருத்தினையே உணர்த்தல் காண்க.

"இறைச்சி கருப்பொருள் களனுத் தோன்றும்" எனத் தொல்காப்பியனார் யாண்டும் கூறவில்லை என்பார் சிலர். சிலர் இறைச்சி என்னும் சொல் கருப்பொருளைக் குறிக்காதென்பர்.

"இறைச்சிப் பொருள்வகை திறப்படத் தெரியில்
அங்கியற் பொருளே திணைநிலைப் பொருளே
வன்புலப் பொதுப்பொருள் மென்புலப் பொதுப்பொருள்
பெருமைப் பொதுப்பொருள் விருந்துப்பொதுப் பொருளென
இருமூன் றென்பர் தெரிநூற் புலவர்"

என்னும் வீரசோழியஉரை மேற்கோள்சூத்திரமும் "புணர்ந்துடன் போகிய கிழவோண் மனையிருந் திடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி" என்ற தொல்காப்பியத்தொடரும் "இறைச்சியிற்............ பொருளனந்தம்" என்னும் யாப்பருங்கலஉரை மேற்கோள்சூத்திரமும் 'இறைச்சி' என்னும்சொல் 'கருப்பொருள்' எனப் பொருள்படும் என்பதை உணர்த்தும். கருப்பொருட் சார்பு இறைச்சிக்கும் இன்றியமையாததாக நச்சினார்க்கினியர்தாம் கொண்டாரெனல் வேண்டா. இளம்பூரணரும் அக்கொள்கையினரே. "இறைச்சிப் பொருள் என்பது உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும் பொருள்" என்ற இளம்பூரணர், "அஃதாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகிவருவது" என

உரைப்பதை நோக்குக. "உடனுறையுவமம்" என்ற சூத்திரத்திற்கு உரைஎழுதிய இளம்பூரணர், "உள்ளுறையாவது பிறிதொரு பொருள் புலப்படுமாறு நிற்பதொன்று; அது கருப்பொருள்பற்றி வருமென்பது அகத்திணையியலுட் கூறப்பட்டது" என்பதையும் நோக்குக.

"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர்காட்டும் உதாரணம்,

"இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை" என்பதாம்.

இங்கே சொல்லவேண்டும்பொருள் 'சூள்பொய்த்தான்' என்பது. அப்பொருளின் புறத்தே, "இங்ஙனம் பொய்த்தான் மலையகத்து நீர் திகழ்கிறது; இது என்னவியப்போ?" எனத்தோன்றும் பொருளாகிய "தலைவன் சூள்பொய்க்குமாறு செய்யான்" என்பது இறைச்சியாம்.

மதுரைப் பாலாசிரியர் நற்றுமனார், அகம் 92-ஆம் செய்யுளில்

"மந்தி யறியா மரம்பயி லிறும்பி
ஞெண்செங் காந்த ளவிழ்ந்த வாங்கட்
டண்பல் லருவித் தாழ்நீ ரொருசிறை
யுருமுச் சிவந்தெறிந்த வுரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை
யிருண்மென் கூந்த லேமுறு துயிலே"

என்னும் இப்பகுதியில் "காந்தள் அவிழ்ந்த ஆங்கண்" என்றமையால் பூப்பறிக்கவருவராலும், "அருவித்தாழ்நீரொருசிறை" என்றமையால் அருவியாடவருவாராலும் பகற்குறியும் அரிதென்று, கூறவேண்டும் பொருட்புறத்து இறைச்சியிற்பொருள்தோன்றக் கூறி வரைவுகடாயினாள்; இது "இறைச்சிதானே பொருட்புறத்ததுவே" என்றவிதிபற்றி அமைந்தது:" என்பர் அகநானூற்றுப் பழைய உரையாசிரியர். மேற்காட்டிய "மந்தியும்......துயிலே" என்பதற்கு "இல்லறத்தைக் கருதிய நின் வரைவிற்குக் கொடியசொல்லைக் கூறுவாரும் உதவியாகி வரைவுடன்படுவர்" என்று தோழி

கூறியதாக உள்ளுறையுவமப்பொருள் கொள்ளப்படும். "கார்தள் அவிழ்ந்த ஆங்கண் தண்பல்லருவித் தாழ்நீரொருசிறை" என்ற பகுதி உள்ளுறையுவமைக் குதவவில்லை ஆயினும் களவொழுக்கம் எய்துதற்கு இடையூறுண்டென்பதை உணர்த்துவதாதலின் இறைச்சிப்பொருளதாம். இஃதும் மேற்காட்டிய நச்சினார்க்கினியர் உதாரணமும் இறைச்சிகொள்ளும்முறையில் ஒன்றுபட்டுறுதல் காண்க.

"முத்தணி நீல மணித்தகட் டுள்ளெங்கு மெய்கொளவே
வைத்தணி சேர வகுத்தது போற்றஞ்சை வாணன்வையைப்
பைத்தணி வார்திரை தோய்கருந் தாட்புன்னைப் பாசிலைவெண்
தொத்தணி பூந்துறைவா வருவாயிருள் அங்கிடையே"

என்னும் இச்செய்யுளில் "இறைச்சிகூறியவாறுணர்க" எனஎழுதும் இதன் உரையாசிரியராகிய சொக்கப்பநாவலர் "முத்தணி........ துறைவா" என்னும் பகுதியில் 'இரவில் வரினும் வெண்தொத்தணி வதால் பிறர் அறிவர்; இரவில் வாரற்க' எனக் கூறுவதோடு "வரைவுகடாவுக" என்கூறினானுமாம். என்பதை உணர்த்துவர்.

"கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர்த் தகைப்பன"

ஆதிய தாழிசைகள் மூன்றினும் (பாலைக்கலி. 2) கூறிய இறைச்சி (கரு)ப்பொருள்கள் திணைப்பொருட்கு உபகாரப்பட்டு நின்ற வாறு காண்க. "இக்கருப்பொருள்கள் திணைப்பொருட்கு உபகாரப்பட்டன" என நச்சினார்க்கினியர் கூறுவர்.

"வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா
லைவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவா
மையனை யேத்துவாம் போல வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் பாடுவாம் நாம்" (கலி. 43)

"இதனுட் புலவுநாறியும் பூநாறியும் தீதும் நன்றுமாகிய உலக்கைகளால் தலைவனைப்பாடும் பாட்டோடேகலந்து கூறத்தகாத

தெய்வத்தையும் பாடுவா மென்னும் பொருள்புயப்பச் செய்த இறைச்சியிற்பொருளே பிறந்தவாறும், இரண்டுலக்கையான் பயன் கொண்டாற்போல் ஐயன் பெயர்பாடுதலாற் பயன்கொள்ளாமை யின் உள்ளுறையுவமமன்மையுங் காண்க” என்பர் நச்சினார்கினியர்.

இவ்வுதாரணங்களெல்லாம் “இலங்குமருவித் திலங்குமருவித் தே” என்னும் செய்யுளைப்போலவே இறைச்சிப்பொருள்பட்டவாறு காண்க.

“பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பி னிலைசுளகா
ஆடுகழை நெல்லை யறையுரலுட் பெய்திருவாம்
பாடுகம் வாவாழி தோழி” (குறிஞ்சிக்கலி. 5)

இதற்கு உரையெழுதும் நச்சினார்க்கினியர், “உயர்ந்த மூங்கிலின் நெல் தானேஉதிர்ந்ததனை எடுத்துக்கொண்டு உரலிற்பெய்தென்றதனால் உயர்ந்த தலைவனைத் தெய்வம்தானேகொண்டுவருதலின் அவனை நம்வயத்தனாக்கினே மென்றும், வள்ளைப்பாட்டிற்கு ஏதுவாகிய கோடுஉலக்கையாக என்றதனால் கோடு நெல்லைப்பயன்படுத்தினாற்போல நம்வரைவுகடாவலால் இத்தலைவனை இல்லறப்பயனை எய்துவிக்கின்றேமென்றும் சேம்பினிலை புடைத்தற்றொழிலை முற்ற முடித்து அரிசியை ஆக்காததன்மைபோல இக் களவொழுக்கத்தால் அவன் வரைந்துகோடல் முற்றமுடியாதிருக்கின்றேம் என்றும் இறைச்சி பொருட்புறத்தவாய் நின்றவாறு காண்க” என்பர்.

“கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசைதொறும்
சுரும்பார்க்குங் குரலினே டிருந்தும்பி யியைபூத
ஒருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருள் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கடற் றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்”
(நெய்தற்கலி—6)

இதற்கு உரைகூறும் நச்சினார்க்கினியர், “புன்னைமலரும் செவ்வி பார்த்து அலரை நுகர்தற்குரியன நுகர்கின்றமை கண்டு யாமும் காமச்செவ்வியறிந்து நந்தலைவர் நுகரப்பெற்றிலேமே என்று வருந்

தியும், பாட்டையும் யாழையும் போலும் ஓசைகேட்டுக் கடலுட் படத் துயில்கின்றகாலத்தே யாமும் அவற்றைக்கேட்டுத் தலைவனி டத்துத் துயிலைப்பெறுகின்றிலேமே என்று வருந்தியும் நெஞ்சு சென்றதென மேலே வருகின்ற இரங்கற்பொருட்டு முன்னின்ற கருப்பொருள் இறைச்சிப் பொருளாய்நின்று உபகாரப்பட்டுநின் றது; இஃது "இறைச்சிப் தானே பொருட்புறத்ததுவே" என்பதனு ணர்க" என்பர். பெற்றேம் பெறுகின்றேம் என வாராது பெறு கின்றிலேம் எனப் பொருள்கொள்ளக்கிடத்தலின் இறைச்சியா யிற்று. ஆதலின் இவ்விரு உதாரணங்களால் இறைச்சி உள்ளுறை யுவமமன்று என்பதையும், உள்ளுறையுவமம்போலத் தோற்ற மளிக்கும் என்பதையும் ஓர்ந்துணர்க.

"கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத்து வந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தமை யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே" (குறுந். 225)

இச்செய்யுளை "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே" என் னும் தொல்காப்பியச்சூத்திரத்துக்கு உதாரணமாகக்காட்டுவர் நச்சினார்க்கினியர். அவர், "கருப்பொருள் பிறிதோர்பொருட்கு உபகாரப்படும் பொருட்டாதலேயன்றி அக்கருப்பொருள் தன்னுள் ளே தோன்றும் பொருளுமுள; இதனுள் தான் கெட்டவிடத்து உதவின உதவியை அரசவுரிமையெய்தியமன்னன் மறந்தாற்போல நீ இரந்துதுயருற்றகாலத்து யான் தலைவியை நின்னோடுகூட்டிய செய்ந்நன்றியை மறவாது இன்று நீ வரைந்துகொள்வாயாயின் இவள் கூந்தல் நினக்குரிய என்றவழி, உவமையும் பொருளும் ஒத்து முடிந்தமையின், முன் நின்ற நாடவென்பது, உள்ளுறை யுவம மன்றாய் இறைச்சியாம்; என்னை? தன்கன்றிற்குப் பயன்பட் டும் பிறர்க்கு உயிரைக்கொடுக்கின்ற தினையைத் தானுண்டு அழிவுசெய்கின்றாற்போல, நீ நின்கருமஞ்சிதையாமற் பார்த்து எமக்குயிராகிய இவளைத்துயருறுத்தி எம்மை இறந்துபடுவிக்கின்றாய்

என்று உவமை எய்திற்றேனும் பின்னர்நின்ற பொருளோடு இயை யாது இவ்வுவமம் உள்ளுறையுற்றுப் பொருள்பயவாது இறைச்சி யாகிய நாடனென்பதனுள்ளே வேறோர்பொருள் தோற்றுவித்து நின்றதேயாதலின், முலைமாந்தவென்றது தன்கருமஞ்சிதையாமற் பார்த் தென்னுந்துணையன்றி உள்ளுறையுவமப் பொருளை முற்ற உணர்த்தாமை யுணர்க;" என்பர். மேல் இறைச்சியாகிய நாட னென்றது "கன்றுதன் ... ... நாட" என்னும் பகுதியதாகும், இறைச்சி என்பது கருப்பொருளாதலின். "தன் கன்றிற்கு ... ... இறந்துபடுவித்தலாகாது" என்பது இவ்விறைச்சியுள் தோன்றிய தாதலுணர்க. "கன்று தன் ... ... நாட" என்னும் பகுதி கன்று தன் முலைமாந்திக்கொண்டேயிருப்பத் தன் பசியை நீக்குதற் கும் அக்கன்றுக்குரிய பாலைப்பெறுதற்கும் தினையைப் பிடி உண் டது போல நீயும் யாங்கள் நின்வரவை எதிர்நோக்கி மகிழ்ந்திருக் குங்கால் நின்கடப்பாட்டையும் இவளை வரைவதையும் ஒருங்கே செய்வதற்குக் கருவியாகிய பொருளை ஈட்டிவருதற்குரியை" என் னும் குறிப்புப்பொருளையும் தரும். (உ. வே. சா. உரை)

பெருங்குன்றூர்கிழார்பாடிய அகநானூற்றெட்டாம் பாட்டில்,

"ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
தூங்குதோற் றுதிய வள்ளுகிர் கதுவலிற்
பாம்பு மதனழியும்"

என்னும் இப்பகுதி இறைச்சிப்பொருளுடையதென்கின்றார் இவ் வகநானூற்றுப் பழையவுரையாசிரியர். இதன் இறைச்சிப்பொருள்:- "ஏற்றையானது பாம்பை வருத்தவேண்டுமென்னும் கருத்தில்லை யாயினும் அது தன்காரியம்செய்யவே வள்ளுகிர்படுதலாகிய அவ் வளவிற்குப் பாம்பு வலியழிந்தாற்போல அவர் நம்மை வருத்த வேண்டுமென்னும் கருத்தில்லையாயிருக்கவே தனது காரியமாகிய களவின்பத்தில் ஒழுகவே ஆறின்னாமை ஊறின்னாமை முதலாகிய இவ்வளவிற்கே நாம் வருந்தும்படியாய் விட்டது;" என்பதாம். இவ்விறைச்சியையும், இப்பாட்டிலேயே "கேழலட்ட ... ... புலரா வீர்க்கும்" என்னும் பகுதிக்கு இவ்வுரையாசிரியரே கூறும் உள்ளு றையுவமத்தையும் உற்றுநோக்கின் உள்ளுறையுவமத்திற்கும்

இறைச்சிக்கும் வேறுபாடில்லை என எண்ணும்படி தோன்றும். உண்மையில் இவ்விரண்டற்கும் வேற்றுமையுண்டென்பதை உன்னியறிதல் வேண்டும். எங்ஙனமெனில் மேல் இறைச்சிப்பொருள் பட்டபகுதி 'பாம்பு மதனழிவதுபோல் யாம்வருந்துகின்றோம்' என உணர்த்தின் உள்ளுறையுவமமாம். இஃது அங்ஙனன்றித் தலைவனால் உண்டாம் இன்னலைச்சுட்டி இனியும் இவ் வின்னல்களைத்தாராது விரைவில் மணந்துசெல்க எனத் தலைவனைவற்புறுத்துவதையும் தன்னகத்தே கொண்டதாதலின் இறைச்சியாம். இச்செய்யுளிலுள்ள ஏனைய உள்ளுறைகள் இதற்குத் துணைசெய்வனவாம்.

தவறில ராயினும் பனிப்ப மன்ற
இவறுதிரை திளைக்கு மிடுமண னெடுங்கோட்டு
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி யன்னோள் தோளுற் றோரே, (ஐங்குறு—177)

"இவள் என்னை வருத்துதற்குச்செய்த தவறு ஏன்?" என்று வினவிய தலைமகற்குத் தோழி நகையாடிச்சொல்லியது இது. "இதன் இறைச்சி: 'நீராருநிலத்து முண்டகநறுமலர் கமழும் தொண்டியன்னோள்' என்றது, இவள் காமனுகி நுகர்தற்கரியள் என்பது" எனக் குறிப்பர் இந்நூற் பழையவுரையாசிரியர். இப்பகுதி உள்ளுறையுவமங்கொள்ளுதற்குரிய பகுதியாயினும் உவமம் முற்றும் பொருந்தாமை நோக்குக, முண்டகம்போன்ற தலைவி நுகர்தற்குரியள் என்னாது நுகர்தற்கரியள் எனப் பொருள்கொள்ளக் கிடத்தலின்.

தஞ்சைவாணன்கோவை 232 ஆம் செய்யுளில் "வெடிக்கின்ற இப்பியுள் நித்திலம் பைத்தலை வெம்பகுவாய், தடிக்கின்ற திங்களிற் றோன்றும் துறைவ" என்றது இறைச்சிஎன்க. "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்னும் சூத்திரத்தாணுணர்கஎன உரைப்பர் அதன் உரையாசிரியர் சொக்கப்பநாவலர். இப்பகுதி தலைமகன் கொடுமை கூறும்வழி வந்ததாமென்பதை, இது பிறர்வரைவுணர்த்தல் என்னும் துறைப்பாற்படும் ஆதலின் உணர்க.

மேற்காட்டிய உதாரணங்களிலிருந்து கொடுமைகூறும்வழி வரும் இறைச்சிப்பொருள் உள்ளுறையுவமையைத் தனக்கிடமாகக் கொண்டு வரும் என்ற நியதியுடையதன்று என்பது பெறப்படும்.

"அகவினம் பாடுவாம் தோழி யமர்க்கண்
நகைமொழி நல்லார் காணு நிலைபோல்
தகைகொண்ட வேனலுட் டாழ்குர லூரீஇ
முகைவளர் சாந்துரன் முத்தார் மருப்பின்
வகைசா லுலக்கை வயின்வயி னோச்சிப்
பகையினோய் செய்தான் பயமலை யேத்தி
அகவினம் பாடுவாம் நாம்" (குறிஞ்சிக்கலி)

"மணம்நாறுகின்ற சந்தனத்தாற்செய்த உரல் என்றதனால் பயன் வரைந்துகோடற்பொருட்டுத் தலைவி இயற்பழித்ததாகவும் (நோய்செய்தான் மலையாயிருக்கவும் தினைவிளைத்துப் பயன்தருகின்ற அதிசயத்தை ஏத்தினளவே தலைவி இயற்பழித்தாளாயிற்று), புலால்நாற்றத்தையும் முத்தையுமுடைய மருப்பாற்செய்த உலக்கை என்றதனாற் பயன் வரைந்துகோடற் பயனின்றிப் புகழ்ச்சிமாத்திரையேயாகத் தோழி இயற்படமொழிந்ததாகவும் இறைச்சியிடத்தே பொருள்பிறந்தவாறு காண்க. புலால்நாறும் மருப்பு என்றதனால் வரைந்துகோடல் பயவாமையின் இறைச்சியாயிற்று. இஃது "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே" என்னும் பொருளியற்சூத்திரத்தானுணர்க என நச்சினார்க்கினியர் கூறுவர்.

மாறனலங்கார ஆசிரியர் திருக்குருகைப்பெருமாள் கவிராயர் "கருப்பொருள் களனுக் கட்டுரை பயின்ற பொருட்புறத் தனவா மிறைச்சிப் பொருளணி" என இறைச்சிக்கு இலக்கணங்கூறியுள்ளார். இந்நூலுரையாசிரியர் தென்திருப்பேரை காரிஇரத்நகவிராயர் "இப்பொருள்கோள் கருப்பொருளே தனக்கு நிலைக்களனாக வருமென்பது இதற்கு முதனூல்செய்த ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனாரும் பொருளியலுள் "இறைச்சிதானே பொருட்புறத் ததுவே" என்பதனாலும் கண்டுகொள்க"; எனக் கூறியிருக்கின்றார். இறைச்சிபற்றிய தொல்காப்பியச்சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இறைச்சியை மூன்றுபகுதியாகப் பிரித்து உரையெழுதியிருக்கிறார். அவற்றுள் முதற்பகுதி நச்சினார்க்கினியர்காட்டிய "இலங்கு மருவித் திலங்கு மருவித்தே" என்னும் உதாரணத்தை ஒட்டியதாம்; இரண்டாம்பகுதி "அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்" என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர்காட்டிய

உதாரணத்தைப் பின்பற்றியதாம்; மூன்றாவதுபகுதி ஈண்டு ஆராய்ச்சிக்குரியது.

"நீடிய வியன்சினை நிலாய்க்கறை விளவுற
பாடிமி முருவிப் பனிவரை னன்னுட
விட்டகல் வின்றாய் விழுமியோர் றவலும்
கட்டுரை மதியாக் காவலன் போலவும்
பாகரை யடங்காப் பகட்டுளம் போலவும்
மோகமுற் றனையாய் மூதுரைப் படுத்திய
ஒருவழித் தணத்த லுடன்கொண் டேகலென்
றிருவழித் தாயதி லிசைந்ததொன் றுள்ளாய்
வயல்வளஞ் சிறந்த மருக்குடைப் பொன்னியுட்
புயல்படிக் ததபோற் பொறியர வணைத்துயில்
அரக்கனை வழிபட் டவனருட் கிலக்காய்
வரம்பெறு னரின்யா மனமகிழ் வெய்த
விரைவொடு முயல்வையேல் விரைமென்
மரைமலர் மடந்தைநின் வயத்தின ளாமே."

இது "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே திறத்தியல் மருங்கிற் றெரியு மோர்க்கே" என்பதனுல் எய்தியதிகந்துபடாமற் காத்தது ........................................................ இதனுள்ளு மவ்வாறே அரசியற்கமைந்த நீதியை விட்டுநீங்குதலின்றி யமைச்சியல்முற்றவு முணர்ந்தோர் காலமுமிடமுந் துணிந்துரைத்த வுறுதிக்கட்டுரையை உறுதியென்றுட்கொள்ளா மன்னரைப் போலவும் மயக்கமெய்தினையாய் முதியவுரையாக உனதுணர்வுட் கொளுத்திய ஒருவழித்தணத்த லுடன்கொண்டேகலென இருமுறையாய் வருவனவற்றுள் உனது புத்திக்கிசைவதாகவுட்கொண் டொழுகுங் குறிப் பில்லையாயினே, இனியாயினும் பொன்னியுள் அரக்கனைவழிபட்டு அவனருட்கிலக்காகித் தாம்சிந்தித்த வரம் பெற்றாரைப்போல யாங்களும் மனமகிழ்வெய்த விரைவினோடு வரைந்துகொள்வது முயல்வையேல் தாமரைமலர்மகளையனையாள் நினக்குரிமையாவள் என்றமையால் இறைச்சியாயிற்று. என்னை? வண்டுகள் என்ற உவமை எச்சமாகநின்று, அவை தமக்குப் பின்னைக்குப்புசிப்பதாகவைத்த தேனின்வினைவையோர்ந்து அந்நிலத்து வாழ்வார் மாஸ்பெற்றிக் கொண்டுபோமாறுபோல நீயும் மேல்

வரைந்துகொள்ளலாமென்றிருக்கு மிவளையும் முதிர்ச்சிகண்டு அயலவர் பொன்னணிந்து கொடுபோவர் என உள்ளுறையுவம மெய்திற்றேனும் பின்னர்நின்ற பொருளோடியையாமையின் இவ்வுவமம் உள்ளுறையுற்றுப் பொருள்பயவாது உவமையாகக் குறிக்கப்பட்ட அவ்வண்டுகளொஞ்சிநிற்பது நோக்கமாக நீ இனி வரைந்து கோடல் வேண்டுமென்று கூறுதலே கருத்தாதலை யறிவித்ததால் இறைச்சியாய் நாட என்பதனுள் வேறோர்பொருள் தோற்றுவித்து நின்றதாதலின், "நீடிய வியன்சினை நிலாய் நறை வினைவுற, பாடிமிழருவிப் பனிவரை நன்னாட" என்றது பிறரிவளைப் பொன்னணிந்து கொடுபோவரென்னுந் துணையன்றி உள்ளுறையுவமப் பொருளை முற்றவுணர்த்தாமை யுணர்க. "கன்று தன் பயமுலை மாந்த முன்றிற் றினைபிடி யுண்ணும் பெருங்கன்னாட" என்ற குறுந்தொகைப் பாட்டும் "வேங்கைதொலைத்த" என்னும் குறிஞ்சிக் கலியு மது. பகுதி வரைவுமுடுக்கம், துறை வரைவு கடாதல்" என்பது; மாறனலங்காரவுரை.

ஆதலின், 'உள்ளுறையுவமம்' 'இறைச்சி' ஆகிய இவற்றின் ஒற்றுமைகள் பின்வருவன:—(1) இரண்டும் உள்ளுறை வகைகள் (2) இரண்டும் அகத்திணைக்கே பெருவழக்காய் வருவன. வேற்றுமைகள்:— (1) தெய்வம் ஒழிந்த கருப்பொருள் ஒன்றைக் களனாக் கொண்டு, அக்கருப்பொருள் குறிப்பதை ஒப்பாக்கிக் கருதியபொருளை அவ்வொப்பினால் குறிப்பாலுணர்த்துவது உள்ளுறையுவமம். உள்ளுறையுவமப்பொருளை முற்றவுணர்த்தாது குறிப்பிற்றோன்றும் பிறிதொருபொருள் இறைச்சியாகும். உள்ளுறையுவமச் சார்பின்றியே செய்யுளின் செம்பொருளின்புறத்தே தோன்றும் குறிப்புப்பொருளை வெளிப்படுத்துதற்கு இறைச்சி (கருப்பொருள்) துணையாயிருத்தலுமுண்டு. ஆதலின், இறைச்சி உவமக்குறிப்பொடும்வரும், உவமக்குறிப்பின்றியும் வரும்.

(2) நற்றாய், தந்தை, தன்னையத்தார், ஐயன்மார் நால்வரும் உள்ளுறையுவமம் கூறற்குரியரல்லாதார். தலைவன், தலைவி, செவிலி, தோழி, பாங்கன், பாணன் ஆக அறுவரும் உள்ளுறையுவம் கூறற்குரியவர். இறைச்சி கூறுதற்குரியர் தோழியும் தலைவியுமாம்.

(3) இறைச்சி பெரும்பாலும் தலைவன்கொடுமை கூறுமிடத்து வரும்; சிறுபான்மை அன்புறுதகுந சுட்டுமிடத்தும் வரும். உள்ளுறையுவமம் ஈரிடத்தும் பெரும்பான்மையும் வரும்.

அறிஞர்சிலர் இறைச்சியை வடநூலார்குறிக்கும் 'வியங்கியம்' என்பர்; இறைச்சி புறப்பொருளினும் வரும் என்பர். ஆயினும் டாக்டர் உ, வே. சாமிநாதையர் அவர்கள் புறநானூற்று உரையின் இயல்புகூறும்பகுதியில், (புறநானூறு மூன்றாம்பதிப்பு) "அகப்பொருட் செய்யுட்களுக்கு உரைவகுக்கும் உரையாசிரியர்கள் உள்ளுறையாகவும் இறைச்சிப்பொருளாகவும் அறிந்துகூறும் பொருளைப்போன்றும், பாட்டிற்காணப்படும் இன்னசொற்களின் குறிப்பினால் இன்னபொருள் தோற்றுகின்றதென்றும் இன்னநயம் புலப்படுகின்றதென்றும் இவர்எடுத்துச்சொல்லுமிடங்கள் மிக்க இன்பத்தையுண்டாக்கும்" எனக்குறித்து, இதற்குஎடுத்துக்காட்டாகப் புறம் 23, 143, 145, 200 ஆம் செய்யுட்களைக்காட்டுவர். ஆதலின் ஐயரவர்கள் கருத்தின்படி உள்ளுறையுவமமும் இறைச்சியும் அகப்பொருட்செய்யுட்களிற்றான் வரும் என்பதும் புறத்தில் கொள்ளும் குறிப்புப்பொருளை உள்ளுறையுவமம் இறைச்சியெனக் குறிப்பதில்லை எனவும் நன்குவிளங்கும்.

'வடமொழியில்வழங்கும் வியங்கியம் என்னும் தொனியலங்காரத்துக்குக் கருப்பொருள்சார்பு வேண்டுவதன்று; ஆதலின் தொனியாற்பொருளுணர்த்தும் இறைச்சிக்கும் கருப்பொருள்சார்பு இல்லை' என வாதிப்பார் சிலர். 'இச்சாரார் 'தமிழில் வழங்கும் அணியிலக்கணம் வடமொழி அணியிலக்கணத்தின் மொழிபெயர்ப்பேயொழிய தமிழுக்கென ஒன்றில்லை' என்னும் கொள்கையுடையர் ஆவர். அணிகளுள் பல அவர்தம் நினைப்பின்படி இருக்கலாமெனினும் ஒருசிலவாவது தமிழுக்கென இருந்திருத்தல் வேண்டுமன்றோ? நனிநாகரிகம்பெற்ற தமிழரின் வாழ்க்கைவளத்தைப் புலப்படுத்துகிற தொல்காப்பியம் அவர்களது பேச்சுத்திறத்தினையும் அறிவிக்கின்ற தன்றோ? அணியிலக்கணம் பேச்சுத்திறத்தினை அளந்துகாட்டுவதொன்றுதானே? குறிப்பால் பொருளுணர்த்தலை விளக்கும் தொல்காப்பியர் அவற்றை முன்னம் குறிப்புமொழி

எச்சம் எனப் பாகுபடுத்திக்கூறும் முறையினை ஓர்க. தமிழுக்கென அணியிலக்கணம் தனியாக அமையவில்லையெனக் கூறுவோர் சிறிது சிந்திப்பின் இன்று அணியிலக்கணங்கூறும் பல்வகையணிகளும் பண்டைய சங்கஇலக்கியங்களுள் விளங்குவதைக் காணலாம்.

தொல்காப்பியரால் குறிக்கப்படும் உவமைகளுள் உள்ளுறை யுவமம் என்பதொன்று. இதன் இலக்கணம் மேலே கூறப்பட்டது. இவ்வணி வடமொழியில் காணப்படாததொன்று. இதனை ஒருபுடையொத்த அணியொன்றுண்டு. அது பரிகராலங்காரம் எனப்படுவது. அவ்வணி தமிழில் 'கருத்துடையணி' எனக் கூறப்படுகிறது. அஃதாவது ஓர் கருத்தையுட்கொண்ட அடைமொழியமைத்துக் கூறுதலாம். "திங்கண் முடிசேர் சிவனுமது தாபத்தை, இங்ககற்றி யாள்க வினிது" என்பது அதற்கோர் உதாரணம். இதனுள் "திங்கண் முடிசேர்" என்னும் அடைமொழி தாபத்தை நீக்கவல்லவன் என்னும் கருத்தை உட்கொண்டிருக்கின்றது. குவலயானந்த (தமிழ்) உரையாசிரியர் வித்வான் முகவூர் மீனாட்சிசுந்தரக்கவிராயரவர்கள் இவ்வணியில் வியங்கியமான பொருளிருந்தபோதிலும் தொனியென்ற விவகாரமில்லையெனக்கூறியுள்ளார். ஆதலின் இது வியங்கியத்தின் வேறுபட்டதாம். அடைமொழி ஓர் கருத்தை உட்கொண்டிருப்பதால் தமிழில்வழங்கும் உள்ளுறையுவமமெனக்கூறல் இயலாது, அவ்வடைமொழி நாடு, ஊர் முதலியவற்றை விளக்கவந்த கருப்பொருள்களாலமையவில்லையாதலின். உள்ளுறையுவமம் தமிழுக்கே யுரியதொன்று என்பது இதனால் விசதமன்றோ? 'இறைச்சி, வடமொழியிலக்கணத்தில் கூறப்படாததனால் கருப்பொருட் சார்புடையதன்று' எனல் பொருந்துமோ? மேற்கண்ட உதாரணங்களிலிருந்து தமிழில் கருப்பொருள் சார்பொடும் இறைச்சிதோன்றும் என்பது நன்குபுலனாகின்றது. ஓர்க.